**நிதி ஆணைக்குழுவின்**
**வருடாந்த செயலாற்றுகை அறிக்கை - 2024**

**செலவினத் தலைப்பு இல. 011**


நிதி ஆணைக்குழு
*இல.03, சரண மாவத்தை, ராஜகிரிய*

# பொருளடக்கம்

**உள்ளடக்கம்** **பக்க இல.**

*அத்தியாயம் - 01:* நிறுவனத்தின் விவரம் / நிறைவேற்றுப் பொழிப்பு .......... 1

*அத்தியாயம் - 02:* முன்னேற்றம் மற்றும் எதிர்கால கண்ணோட்டம் .......... 9

*அத்தியாயம் - 03: 2024* டிசம்பர் *31*ஆந் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான ஒட்டுமொத்த நிதி செயலாற்றுகை .......... 27

*அத்தியாயம் - 04:* செயலாற்றுகைக் குறிகாட்டிகள் .......... 38

*அத்தியாயம் - 05:* நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (SDGs) அடையும் செயலாற்றுகை .......... 39

*அத்தியாயம் - 06:* மனிதவள விபரம் .......... 43

*அத்தியாயம் - 07:* இணக்க அறிக்கை .......... 47

## அத்தியாயம் - 01: நிறுவனத்தின் விவரம் / நிறைவேற்றுப் பொழிப்பு

### 1.1. அறிமுகம்

#### 1.1.1. பின்னணி

*1987 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தின் மூலம், மாகாண சபைகள் மற்றும் நிதி ஆணைக்குழுவினை தாபிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. மாகாணங்களுக்கான வளங்களை பகிர்ந்தளிக்கும் செயற்பாட்டினை எளிதாக்குவதற்காக நிதி ஆணைக்குழு தாபிக்கப்பட்டதுடன், அதன்மூலம் மாகாண சபைகளுக்கு தனது சேவை வழங்கலை செயற்படுத்துவதற்கான வசதி ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டுள்ளது. அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, வளத் தேவைப்பாடு பற்றியும் நாட்டில் சமநிலையான அபிவிருத்தியினை அடையும் நோக்கத்துடன் ஒன்பது மாகாணங்களுக்குமிடையே வருடாந்த பாதீட்டில் ஒதுக்கப்படும் நிதியினைப் பகிர்ந்தளிப்பது தொடர்பான கொள்கைகளைத் தயாரிப்பது தொடர்பாக அரசிற்கு தனது பரிந்துரைகளை முன்வைப்பதும் நிதி ஆணைக்குழுவின் முதன்மைப் பொறுப்புக்களாகும்.*

#### 1.1.2. நிதி ஆணைக்குழுவினது ஆணை

*இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் உறுப்புரை 154ண ஆனது நிதி ஆணைக்குழுவினை நிறுவுவதற்கான ஏற்பாடுகளை வழங்குவதுடன் அதன் செயற்பாடுகளையும் விபரிக்கின்றது. அரசியலமைப்பின் உறுப்புரை 154ண (3), (4) மற்றும் (5) ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான நிதி ஆணைக்குழுவின் ஆணை பின்வருமாறு.*

***உறுப்புரை 154ண (3)** : மாகாணங்களின் தேவைகளைச் நிவர்த்தி செய்யும் நோக்கத்திற்காக, பொதுவான அத்தகைய நிதியங்களை அரசாங்க ஆணைக்குழுவின் விதப்புரை மீதும் அதன் கலந்தாலோசனையுடனும் ஆண்டு வரவு செலவுத் திட்டத்திலிருந்து குறித்தொதுக்குதல் வேண்டும்.*

***உறுப்புரை 154ண (4)** : பின்வருவன பற்றி சனாதிபதிக்கு விதப்புரைகளைச் செய்தல் ஆணைக்குழுவின் கடமையாதல் வேண்டும் என்பது –*

*அ) மாகாணங்களின் பயன்பாட்டிற்கென அரசாங்கத்தினால், ஆண்டு தோறும் வழங்கப்படும் நிதிகள், எந்நெறிகளின் மூலம் பல்வேறு மாகாணங்களுக்கிடையில் பங்கிடப்படுதல் வேண்டுமோ அந்நெறிகள் பற்றியும் : அத்துடன்*

*ஆ) மாகாண நிதி தொடர்பாக சனாதிபதியினால் ஆணைக்குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படும் வேறு ஏதேனும் கருமம் பற்றியும்,*

***உறுப்புரை 154ண (5)** : ஆணைக்குழு, நாட்டின் சமநிலையான பிராந்திய அபிவிருத்தியை அடையும் நோக்கத்துடனான அத்தகைய நெறிகளை வகுத்தமைத்தல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க பின்வருவனவற்றை கருத்திற் கொள்ளுதல் வேண்டும்:-*

*அ) ஒவ்வொரு மாகாணத்தினதும் சனத்தொகை*

*ஆ) ஒவ்வொரு மாகாணத்தினதும் தலா வருமானம்*

*இ) பொருளாதார மற்றும் சமூக சமத்துவமின்மைகளைப் படிப்படியாகக் குறைப்பதற்கான தேவை : அத்துடன்*

*ஈ) ஒவ்வொரு மாகாணத்திற்குமுள்ளேயான தலா வருமானத்திற்கும், மாகாணங்களுக்கிடையிலான அதியுயர் தலா வருமானத்திற்குமிடையேயான*

வேறுபாட்டினை படிப்படியாகக் குறைப்பதற்கான தேவைப்பாட்டினை கருத்திற்கொள்ள வேண்டும்.

நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகள் கிடைக்கப்பெற்றதும், கௌரவ ஜனாதிபதி அவர்களால் நடைமுறைப்படுத்துவதற்காகவும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான ஒப்புதலைப் பெறுவதற்காகவும் அப்பரிந்துரைகள் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படுகின்றன. அதன்பின்னர், அரசியலமைப்பின் உறுப்புரை 154ண (7) இன் பிரகாரம், கௌரவ ஜனாதிபதி அவர்களினால் அப்பரிந்துரைகள் மற்றும் அவற்றின் மீதான நடவடிக்கைகள் குறித்து பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### 1.1.3. தற்போதைய நிதி ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள்

உறுப்புரை 154 ண(1) இற்கமைய, நிதி ஆணைக்குழுவானது ஐந்து அங்கத்தவர்களை உள்ளடக்கியதோடு அதன் தற்போதைய அங்கத்தவர்கள் பின்வருமாறு,

i. திரு.சுமித் அபேசிங்ஹ - தலைவர்
ii. கலாநிதி பி. நந்தலால் வீரசிங்ஹ - அங்கத்தவர் (பதவி வழி) மற்றும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்
iii. திரு.கே.எம்.மஹிந்த சிறிவர்தன - அங்கத்தவர் (பதவி வழி) மற்றும் திறைசேரியின் செயலாளர்
iv. திரு. எம்.வாமதேவன் - அங்கத்தவர்
v. திரு.டீ.நலீன் ஒஸென் - அங்கத்தவர்

## 1.2. நிறுவனத்தின் தொலைநோக்கு, பணிக்கூற்று மற்றும் குறிக்கோள்கள்

நிதி ஆணைக்குழு தனது மூலோபாயத் திட்டத்தினை வகுத்து 2021 தொடக்கம் 2024 வரையான காலப்பகுதிக்காக இற்றைப்படுத்தியுள்ளதோடு, அத் திட்டத்தில் தொலைநோக்கு, பணிக்கூற்று மற்றும் குறிக்கோள்கள் தெளிவாக அடையாளம் காணப்பட்டு வரையறுக்கப்பட்டுள்ளது.

**தொலைநோக்கு:**

சமநிலையான பிராந்திய அபிவிருத்தியுடன் கூடிய ஒரு சுபீட்சமான இலங்கை

**பணிக்கூற்று:**

நாட்டில் சமநிலையான பிராந்திய அபிவிருத்தியினை அடைவதன் பொருட்டு தேவைகளை மதிப்பீடு செய்தல் மற்றும்; மாகாண நிதிப்பகிர்விற்கான கொள்கைப் பரிந்துரைகளை முன்வைத்தல்.

**நிதி ஆணைக்குழுவின் குறிக்கோள்கள்**

1. அரசியலமைப்பினால் ஆணைக்குழுவிற்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள பங்கினை நிறைவேற்றுதல்.
2. மாகாணங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப் போதுமான நிதியை பொது திறைசேரியிலிருந்து பெற்றுக்கொடுப்பதற்காக பரிந்துரைகளை மேற்கொள்ளல்.
3. சமமான பிராந்திய அபிவிருத்தியினை நோக்கமாகக் கொண்டு மாகாணங்களுக்கிடையே நிதி வளத்தினை நியாயமான முறையில் பகிர்ந்தளிப்பதற்கான பரிந்துரைகளை முன்வைத்தல்.
4. பகிர்ந்தளிக்கப்பட்ட மானிய நிதியினை விவேகத்துடன் செலவு செய்வதனை உறுதிப்படுத்துவதற்காக மாகாண சபைகளுக்கு வழிகாட்டல்களை அனுப்புதல்.

## 1.3. நிதி ஆணைக்குழுவின் முதன்மைச் செயற்பாடுகள்

அரசியலமைப்பு ஆணையின்படி, நிதி ஆணைக்குழுவின் முதன்மை செயற்பாடானது மாகாணங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப் போதுமானளவு நிதியினை வருடாந்த பாதீட்டிலிருந்து ஒதுக்கீடு செய்வதற்கான பரிந்துரைகளை அரசிற்கு முன்வைப்பதும் நாட்டில் சமநிலையான பிராந்திய அபிவிருத்தியினை அடையும் நோக்கத்திற்காக அத்தகைய நிதியினை பகிர்ந்தளிப்பது தொடர்பான கொள்கைகளை கௌரவ ஜனாதிபதி அவர்களுக்குப் பரிந்துரை செய்வதுமாகும்.

இச்செயன்முறையின்போது, நிதி ஆணைக்குழுவானது;

i. மாகாண சபைகளுக்கு அவற்றின் வருடாந்த வளத் தேவைப்பாட்டினை தயாரிப்பதற்கும் முன்வைப்பதற்கும் தேவையான வழிகாட்டல்களை வழங்குதல்.

ii. மாகாண அதிகாரிகளுடனான விரிவான கலந்துரையாடல்களின் பின்னர் மாகாண சபைகளின் தேவைகளை மதிப்பிடல்.

iii. தேசிய பாதீட்டிலிருந்து மாகாண சபைகளுக்குத் தேவையான நிதி தொடர்பாக பரிந்துரைகளை முன்வைத்தல் மற்றும் பாதீட்டினால் ஒதுக்கீடு செய்து வழங்கப்படும் நிதியை மாகாணங்களுக்கிடையே பகிர்ந்தளிப்பது தொடர்பான கொள்கைகள் தொடர்பாக கௌரவ ஜனாதிபதி அவர்களுக்கு பரிந்துரைகளை முன்வைத்தல்

iv. கௌரவ ஜனாதிபதி அவர்களின் / அரசாங்கத்தின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொண்ட பின்னர், மாகாணத்தின் பல்வேறு துறைகளுக்காக தேசிய பாதீட்டில் ஒதுக்கப்பட்ட நிதியை பகிர்ந்தளித்தல்.

v. நிதிப் பயன்பாட்டின் வினைத்திறன் மற்றும் செயல்திறனை மேம்படுத்தும் நோக்கில் வருடாந்த மாகாண அபிவிருத்தித் திட்டங்களை உருவாக்குவது தொடர்பான வழிகாட்டல்களை வழங்குதல்.

vi. தொடர்புபட்ட உரித்தாளர்களினது பங்குபற்றலுடன் மாகாண அபிவிருத்தி திட்டங்களை மீளாய்வு செய்து சில திருத்தங்களுக்கு உட்படுத்தப்பட்டு அவற்றை செயற்படுத்துவதற்கான ஒப்புதலை வழங்குதல்..

vii. மாகாண ஆளணி முகாமைத்துவம் தொடர்பில் அரசாங்கத்திற்கு பரிந்துரைகளை வழங்குதல்.

## 1.4. நிதி ஆணைக்குழுவின் பிரதான பிரிவுகள்

நிதி ஆணைக்குழுவின் முதன்மைப் பணிகளை முன்னெடுப்பதற்கும் அதன் செயற்பாடுகளுக்கும் பின்வரும் செயற்பாட்டு மற்றும் துணைப் பிரிவுகளுடன் நிதி ஆணைக்குழு கட்டமைக்கப்பட்டுள்ளது.

- மாகாண அபிவிருத்தித் திட்டமிடல் பிரிவு
- மாகாண வருமானங்கள், மீண்டெழும் தேவைகள் மற்றும் ஆளணி மதிப்பீட்டு பிரிவு
- கொள்கை, கற்கைகள் மற்றும் அறிக்கையிடல் பிரிவு
- நிர்வாகப் பிரிவு
- கணக்கீட்டுப் பிரிவு
- உள்ளக கணக்காய்வுப் பிரிவு

### *1.4.1.* நிதி ஆணைக்குழுவின் பிரிவுகளின் செயற்பாடுகள்

#### அ. மாகாண அபிவிருத்தித் திட்டமிடல் பிரிவு

1. வருடாந்த மாகாண மூலதனத் தேவைகளை முன்வைப்பது தொடர்பாக மாகாண சபைகளுக்கான வழிகாட்டல்களை வெளியிடல்.
2. நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் உள்ளடக்குவதற்காக மாகாண மூலதனத் தேவைகளை மதிப்பிடல் மற்றும் தேசிய பாதீட்டிலிருந்து குறித்தொதுக்கப்பட்ட நிதியினை ஒவ்வொரு மாகாணத்திலுமுள்ள பல்வேறு துறைகளுக்கிடையே பகிர்ந்தளித்தல்.
3. மாகாண வருடாந்த அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிப்பதற்கான வழிகாட்டல்களை வழங்குதல்.
4. பராமரிப்பு செயல்திட்டத்தினை தயாரித்தல் மற்றும் அதனை செயற்படுத்துவது தொடர்பாக வழிகாட்டல்களை வெளியிடல்.
5. மாகாண வருடாந்த அபிவிருத்தித் திட்டங்களை மீளாய்வு செய்து அத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான ஒப்புதலை வழங்குதல்.

#### ஆ. மாகாண வருமானங்கள், மீண்டெழும் தேவைகள் மற்றும் ஆளணி மதிப்பீட்டு பிரிவு

1. மாகாண சபைகள், உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் மாகாண அதிகார சபைகள் ஆகியவற்றின் மீண்டெழும் தேவைகளை தனித்தனியே மதிப்பீடு செய்தல் மற்றும் மாகாணங்களுக்கிடையே மானிய நிதியினைப் பகிர்ந்தளித்தல்.
2. மாகாண மீண்டெழும் தேவைகளை முன்வைப்பதற்கான வழிகாட்டல்களை மாகாண சபைகளுக்கு வெளியிடல்.
3. மாகாணங்களின் தேவைகளுக்கேற்ப மேலதிக ஒதுக்கீடுகளைப் பரிந்துரை செய்தல்.
4. மாகாண ஆளணியினரை நிர்ணயிப்பதில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு செயற்படல்.
5. மாகாணத் தேவைகளுக்கான கட்டுநிதியினை விடுவிப்பதில் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு செயற்படல்.
6. மாகாண வருமானத்தினை மதிப்பீடு செய்தல் மற்றும் வருமான இலக்குகளை நிர்ணயித்தல்.

#### இ. கொள்கை , கற்கைகள் மற்றும் அறிக்கையிடல் பிரிவு

1. கௌரவ ஜனாதிபதி அவர்களுக்கு முன்வைக்கும் பரிந்துரையினை தயாரிக்கும் செயற்பாட்டின் போது ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு உதவுதல்.
2. நிதி ஆணைக்குழுவின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையினைத் தயாரித்து பாராளுமன்றத்திடம் சமர்ப்பித்தல்.
3. மானிய நிதியினை பகிர்ந்து ஒதுக்குவதற்கான கொள்கைகளைக் கண்டறிதல்.
4. தேவைகளுக்கேற்ப இற்றைப்படுத்திய அறிக்கைகளைத் தயாரித்தல்.

**ஈ. நிர்வாகப் பிரிவு**

1. நிதி ஆணைக்குழுவின் அனைத்து உத்தியோகத்தர்களினதும் தனிப்பட்ட கோப்பு தொடர்பான விடயங்கள் – இற்றைப்படுத்திய சம்பள உயர்வினை பரிந்துரைத்தல் மற்றும் அங்கீகரித்தல், செயலாற்றுகை மதிப்பீடு, உரிய உத்தியோகத்தர்களின் சொத்து மற்றும் கடப்பாடுகளை சேர்த்தல், விதவைகள் தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத் திட்ட நடவடிக்கைகள், ஓய்வூதியத் திட்ட நடவடிக்கைகள் மற்றும் இறப்புப் பணிக்கொடை தொடர்பான விடயங்கள், பதவி உயர்வு மற்றும் இடமாற்றம் தொடர்பான விடயங்கள்

2. விடுமுறை தொடர்பான விடயங்கள் - உத்தியோகத்தர்களினதும் நிதி ஆணைக்குழுவின் அங்கத்தவர்களினதும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விடுமுறை தொடர்பான விடயங்கள், சம்பளத்துடனான அல்லது சம்பளமற்ற கற்கை விடுமுறை தொடர்பான விடயங்கள், அரச நிர்வாகச் சுற்றறிக்கைமற்றும் ஏனைய அரச சுற்றறிக்கைகளுக்கு அமைவாக ஏனைய விடுமுறை தொடர்பான விடயங்கள்

3. அலுவலகத்தின் தேவையான பராமரிப்பு தொடர்பான விடயங்கள் – நீர், மின்சாரம், தொலைபேசி, இணையம், பாதுகாப்பு சேவை, சுத்திகரிப்பு சேவை மற்றும் கட்டட பராமரிப்புச் சேவை

4. அனைத்து கொடுப்பனவுகளையும் அங்கீகரித்தல் – சம்பளம், பட்டதாரி பயிற்சிப் படி, மேலதிக நேரம், நான்கில் ஒன்று கொடுப்பனவு மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்

5. ஆணைக்குழு அங்கத்தவர்களின் அனைத்து நிர்வாக நடவடிக்கைகள்

6. உத்தியோகத்தர்களின் கடன் தொடர்பான நடவடிக்கைகள் – இடர் கடன், விழா முற்பணம் மற்றும் விசேட முற்பணம், சொத்துக்கடன் மற்றும் ஏனைய கடன் தொடர்பான விடயங்கள்.

7. மனித வள அபிவிருத்தி நிகழ்ச்சிகள் – உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சிகளுக்காக உத்தியோகத்தர்களை அனுப்பி வைத்தல், பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துதல் மற்றும் ஏற்பாடு செய்தல்.

8. ஏனைய நிர்வாக நடவடிக்கைகள் – உரிய நேரத்தில் அறிக்கைகளை அனுப்புதல்

**உ. கணக்கீட்டுப் பிரிவு**

1. நிதி ஆணைக்குழு அலுவலகத்தின் மீண்டெழும் மற்றும் மூலதன வரவுசெலவு தொடர்பான நிதி ஒழுங்குவிதிகள், அரசாங்க சுற்றறிக்கைகள் மற்றும் வழிகாட்டல்களின் படி நிதி முகாமைத்துவத்தினை செயல்படுத்துதல்.
2. பெறுகை தொடர்பான செயற்பாடுகளின் செயலாற்றுகை.
3. நிதி ஆணைக்குழு அலுவலகத்தின் சொத்து முகாமைத்துவத்தினை செயல்படுத்துதல்.
4. வருடாந்த நிதிக்கூற்றுக்களையும், வரவுசெலவு மதிப்பீடுகளையும் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல்.
5. அரச அதிகாரிகளின் முற்பண “பி” கணக்கை நிச்சயிக்கப்பட்ட எல்லைகளுக்குள் பராமரித்தல் மற்றும் வருடாந்த இணக்கக் கூற்றுக்களை சமர்ப்பித்தல்.
6. நிதி ஆணைக்குழு அலுவலகத்திற்குரிய உள்ளக மற்றும் பொது கணக்காய்வு விடயங்கள் மற்றும் அரச கணக்கு நடவடிக்கைகளுடன் தொடர்புபடல்.

***ஊ. உள்ளக கணக்காய்வுப் பிரிவு***

1. *வருடாந்த உள்ளக கணக்காய்வுத் திட்டத்தினைத் தயாரித்தல்.*

2. *நிதி ஆணைக்குழுவினால் எதிர்பார்க்கப்படும் குறிக்கோள்களை அடைவதற்காக வளங்களை வினைத்திறனாகவும் விளைதிறனாகவும் முகாமை செய்வதற்காக உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை மதிப்பிடல் மற்றும் அத்தகைய கட்டுப்பாட்டு முறைமைகளை மேம்படுத்துவதற்கான நற் பிரயோகங்களை பரிந்துரை செய்தல்.*

3. *கொள்கைகள், நடைமுறைகள், சுற்றுநிருபங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக நிதி ஆணைக்குழுவினது அலுவலகத்தின் தொழிற்பாட்டு மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளினது இணக்கப்பாட்டினை மதிப்பீடு செய்தல் மற்றும் திருத்தங்கள் மேற்கொள்ளல் மற்றும் முன்னேற்றத்துக்கான பரிந்துரைகளை வழங்குதல்.*

## *1.5. நிறுவனக் கட்டமைப்பு*




| | |
|---|---|
| பிப./உப | - பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் |
| நி.உ | - நிர்வாக உத்தியோகத்தர் |
| த.தொ.தொ.உ | - தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் |
| பு.உ | - புள்ளிவிபரவியல் உத்தியோகத்தர் |
| உ.ஆ.உ | - உதவி ஆராய்ச்சி உத்தியோகத்தர் |
| அ.உ | - அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| மு.சே.உ | - முகாமைத்துவ சேவைகள் உத்தியோகத்தர் |
| த.தொ.தொ.உத. | – தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர் |
| அ.ஊ | - அலுவலக ஊழியர் |

### *1.6. நிதி ஆணைக்குழுவின் கீழ்வரும் நிறுவனங்கள்/நிதியங்கள்*

*நிதி ஆணைக்குழுவின் கீழ் எந்தவொரு நிறுவனமும் செயற்படுவதில்லை. நிதி ஆணைக்குழுவானது அரசியலமைப்பின் உறுப்புரை 41ஆ வின் பின்னிணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சுயாதீனமான ஆணைக்குழுக்களுள் ஒன்றாகும்.*

### *1.7. வெளிநாட்டு நிதியுதவியின் கீழான கருத்திட்டங்களின் விபரங்கள் (ஏதும் இருப்பின்) :*

*நிதி ஆணைக்குழுவினால் எந்தவொரு வெளிநாட்டு நிதியுதவியுடனான கருத்திட்டமும் செயல்படுத்தப்படவில்லை.*

*அ) கருத்திட்டத்தின் பெயர் :*
*ஆ) நன்கொடை வழங்கும் முகவர் :*
*இ) கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட தொகை – ரூ. மில். :*
*ஈ) கருத்திட்ட காலம்*

பொருத்தமற்றது

## *அத்தியாயம் - 02: முன்னேற்றம் மற்றும் எதிர்கால கண்ணோட்டம்*

### *2.1. முன்னேற்றம்*

*2024 ஆம் ஆண்டில், நிதி ஆணைக்குழு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பினால் அதிகாரமளிக்கப்பட்ட கீழ்வரும் விடயங்களை அவ்வாண்டுக்கான செயல்திட்ட கால சட்டகத்திற்கேற்ப நிறைவேற்றியது.*

#### *2.1.1. மாகாண மூலதன பாதீட்டுடன் தொடர்புடைய விடயங்கள்*

***i. 2025 ஆம் ஆண்டுக்காக மூலதனத் தேவைகளைத் தயாரிப்பதற்கான வழிகாட்டல்களை மாகாண சபைகளுக்கு வெளியிடல்***

*2025 ஆம் ஆண்டுக்கான மூலதனத் தேவைகளைத் தயாரித்து சமர்ப்பிப்பதற்கான வழிகாட்டல்கள் 2024 பெப்ரவரி 12ஆந்திகதி அனைத்து மாகாண பிரதம செயலாளர்களுக்கும் அனுப்பப்பட்டன. மாகாணங்களின் நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான நிதித் தேவைகள் குறித்து கௌரவ ஜனாதிபதி அவர்களுக்கும் அரசாங்கத்திற்கும் பரிந்துரைகளை வழங்குவதற்காக, நிதி ஆணைக்குழு அதன் அரசியலமைப்பு ஆணையின் கீழ் வருடாந்தம் மாகாண சபைகளின் நிதித் தேவைகளை மதிப்பிடுகிறது.*

***ii. 2024 ஆம் ஆண்டுக்கான வருடாந்த மாகாண அபிவிருத்தித் திட்டங்களை மீளாய்வு செய்தல்***

*நிதி ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட வழிகாட்டல்களின்படி பொதுவான படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்ட 2024 ஆம் ஆண்டுக்கான மாகாணத்திற்குரிய வருடாந்த அபிவிருத்தித் திட்டங்கள் அனைத்து மாகாண சபைகளிடமிருந்தும் 2024 பெப்ரவரி நடுப்பகுதியில் பெற்றுக்கொள்ளப்பட்டது. ஒவ்வொரு மாகாண சபைகளினாலும் சமர்ப்பிக்கப்பட்ட வருடாந்த அபிவிருத்தித் திட்டங்கள் நிதி ஆணைக்குழுவினால் ஆராயப்பட்டு மேலதிக தகவல்கள் தேவைப்பட்ட அத்திட்டங்களின் குறித்த சில பகுதிகள் தொடர்பில் மேலும் தெளிவு பெறுவதற்காக ஸூம் நிகழ்நிலைக் கூட்டத்தினூடாக விரிவான தொடர் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது. நிதி ஆணைக்குழுவின் தலைவரின் தலைமைத்துவத்துடன், நிதி ஆணைக்குழுவின் செயலாளர், தேசிய திட்டமிடல் திணைக்களம் மற்றும் அரச வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரிகள், மாகாண பிரதம செயலாளர்கள், மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாணத் திணைக்களங்களின் தலைவர்கள் மற்றும் மாகாண அமைப்பில் உள்ள பிற தொடர்புடைய சிரேஷ்ட அதிகாரிகள் ஆகியோரின் பங்குபற்றலுடன் இக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.*

*வருடத்தின் முதல் காலாண்டில், அனைத்து மாகாண சபைகளினதும் 2024 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அபிவிருத்தித் திட்டங்கள் மீளாய்வு செய்யப்பட்டதோடு, அவ்வாண்டிற்கான வருடாந்த அபிவிருத்தித் திட்ட செயற்பாடுகளின் பட்டியல் தொடர்பில் நிதி ஆணைக்குழுவினால் முன்வைக்கப்பட்ட அவதானிப்புகளுக்கு அமைய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு திட்டங்களினது பரந்த செயற்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக கொள்கையளவில் ஒப்புதல் வழங்கப்பட்டது.*

*வருடாந்த அபிவிருத்தித் திட்டங்கள் கிடைக்கப்பெற்றமை, மீளாய்வுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டமை மற்றும் அவற்றுக்கு ஒப்புதலளிக்கப்பட்டமை தொடர்பான திகதிகள் பின்வருமாறு.*

**அட்டவணை *01:* வருடாந்த மாகாண அபிவிருத்தித் திட்டங்கள் கிடைக்கப்பெற்றமை, மீளாய்வுக் கூட்டங்கள் நடாத்தியமை மற்றும் ஒப்புதலளிக்கப்பட்மை தொடர்பான தினங்கள்**

| மாகாணம் | வருடாந்த அபிவிருத்தித் திட்டம் கிடைக்கப்பெற்ற திகதி | மீளாய்வுக் கூட்டம் நடைபெற்ற திகதி | ஒப்புதலளிக்கப்பட்ட திகதி |
|---|---|---|---|
| வட | *2024.01.31* | *2024.02.14* | *2024.03.06* |
| மேல் | *2024.02.01* | *2024.02.16* | *2024.02.29* |
| மத்திய | *2024.02.05* | *2024.02.15* | *2024.03.01* |
| ஊவா | *2024.02.10* | *2024.02.21* | *2024.03.07* |
| தென் | *2024.02.16* | *2024.02.20* | *2024.02.27* |
| வடமேல் | *2024.02.16* | *2024.02.26* | *2024.03.06* |
| சப்ரகமுவ | *2024.02.16* | *2024.02.27* | *2024.03.11* |
| வடமத்திய | *2024.02.21* | *2024.03.01* | *2024.03.13* |
| கிழக்கு | *2024.02.21* | *2024.03.05* | *2024.03.12* |

**iii. *2024*ஆம் ஆண்டுக்கான மாகாண சொத்துப் பராமரிப்பு செயற்றிட்டத்தினை மீளாய்வு செய்தல்**

*அரசாங்கம் எதிர்கொள்ளும் தற்போதைய நிதிக் கட்டுப்பாடுகள் காரணமாக, பெரும்பாலான அத்தியாவசிய அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக மூலதன மானிய நிதி மட்டுப்படுத்தப்பட்ட அளவில் காணப்படுவதால், மாகாண சபைகளின் தற்போதைய மூலதன சொத்துக்களை முறையாகப் பராமரிப்பதற்காக குறைந்தபட்ச நிதி வழங்குவது அவசியமாகும் என்று நிதி ஆணைக்குழு அரசாங்கத்திற்கு முன்மொழிந்தது. அதன்படி, மீண்டெழும் செலவினத்தின் கீழ் ஒவ்வொரு மாகாண சபைக்கும் இந்நோக்கத்திற்காக நிதி ஒதுக்கீடொன்றினை மேற்கொள்வதற்கு நிதி ஆணைக்குழு பரிந்துரைத்தது.*

*இதற்கமைவாக, 2024ஆம் ஆண்டுக்கான மூலதன சொத்துக்களின் பராமரிப்பிற்காக ஒன்பது மாகாண சபைகளுக்கும் திறைசேரியினால் 15,000 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. நிதி ஆணைக்குழுவின் வழிகாட்டலின்படி, பிரதான துறைகளுக்கான மூலதன சொத்துக்களின் பராமரிப்புத் திட்டமானது ஒவ்வொரு மாகாண சபையினாலும் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டன. அனைத்து மாகாண சபைகளினதும் 2024ஆம் ஆண்டுக்கான பராமரிப்பு நடவடிக்கைத் திட்டங்கள் மீளாய்வு செய்யப்பட்டதுடன், நிதி ஆணைக்குழு பின்வரும் திகதிகளில் அதற்கான ஒப்புதல்களை வழங்கியது.*

**அட்டவணை *02:* பராமரிப்பு செயல்திட்டத்தினை பெற்றுக்கொண்ட தினங்கள் மற்றும் அவற்றுக்கு ஒப்புதலளிக்கப்பட்ட தினங்கள்**

| மாகாணம் | பராமரிப்பு செயற்றிட்டத்தினை நிதி ஆணைக்குழு பெற்றுக்கொண்ட திகதி | ஒப்புதளிக்கப்பட்ட திகதி |
|---|---|---|
| வட | *2024.02.12* | *2024.03.22* |
| மேல் | *2024.02.16* | *2024.03.13* |
| கிழக்கு | *2024.02.21* | *2024.03.21* |
| வடமேல் | *2024.02.29* | *2024.03.19* |
| ஊவா | *2024.03.05* | *2024.03.25* |
| வடமத்திய | *2024.03.07* | *2024.03.15* |
| தென் | *2024.04.02* | *2024.04.17* |
| சப்ரகமுவ | *2024.04.02* | *2024.04.19* |
| மத்திய | *2024.05.29* | *2024.06.10* |

### *iv.* *2025* **ஆம் ஆண்டுக்காக மாகாண சபைகளினால் சமர்ப்பிக்கப்பட்ட மாகாண மூலதன தேவைப்பாடுகளை மதிப்பீடு செய்தல்**

*எதிர்வரும் ஆண்டிற்கான மாகாண சபைகளின் மூலதனத் தேவைப்பாட்டு மதிப்பிடலானது அரசியலமைப்பின் உறுப்புரை 154ண (3) மற்றும் (4) இன் பிரகாரம் கௌரவ ஜனாதிபதி அவர்களுக்கு சமர்ப்பிக்கப்படும் பரிந்துரைகளினைத் தயாரிப்பதற்கான முன்நிபந்தனையாகும்.*

*அதன்படி, நிதி ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட வழிகாட்டல்களுக்கு அமைவாக மாகாண சபைகளினால் மூலதன நிதித் தேவைப்பாடுகள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டன. மாகாண சபைகளுக்கான நிதித்தேவைப்பாடு குறித்து 2024 யூன் மாதத்திற்குள் அரசாங்கத்திற்கு அறிவார்ந்த முறையிலான பரிந்துரைகளை வழங்குவதற்காக நிதி ஆணைக்குழு இக்கோரிக்கைகளை மீளாய்வு செய்தது.*

***அட்டவணை 03: மாகாண மூலதனத் தேவைப்பாடுகளின் கோரிக்கைகள் கிடைக்கப்பெற்ற தினங்கள்***

| **மாகாணம்** | **மாகாண மூலதனத் தேவைகளின் கோரிக்கைகள் கிடைக்கப்பெற்ற திகதி** |
|---|---|
| மேல் | *2024.03.26* |
| தென் | *2024.04.02* |
| கிழக்கு | *2024.04.08* |
| மத்திய | *2024.04.17* |
| ஊவா | *2024.04.17* |
| வட | *2024.04.26* |
| வடமேல் | *2024.05.11* |
| சப்ரகமுவ | *2024.06.05* |
| வடமத்திய | *2024.06.28* |

### *v.* **2025 ஆம் ஆண்டுக்கான வாக்குப்பணக் கணக்கில் மூலதன மானிய நிதிக்கான ஏற்பாடுகளை மாகாண சபைகளுக்கு அறிவித்தல்**

*2025 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களுக்கான வாக்குப்பணக் கணக்கில் மூலதன மானிய நிதிக்கான ஒதுக்கீடுகள் மாகாண சபைகளுக்கு அறியப்படுத்தப்பட்டன; மாகாண குறித்தொதுக்கிய மானிய நிதி – 21,000 மில்லியன் ரூபாய், பிரமாண அடிப்படையிலான மானிய நிதி – 2,000 மில்லியன் ரூபாய் மற்றும் வெளிநாட்டு உதவியுடனான கருத்திட்டங்கள் – 2,000 மில்லியன் ரூபாய் மற்றும் அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை கருத்திட்டத்தின் கீழ் செயற்பாடுகளைப் பூர்த்தி செய்தல் – 2,000 மில்லியன் ரூபாய். வருடாந்த அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைத் திட்டங்களைத் தயாரிக்கும் நோக்கத்திற்காக, 2025 ஆம் ஆண்டிற்காக எதிர்பார்க்கப்படும் ஒதுக்கீட்டு சட்டமூலத்தில் ஒன்பது மாகாண சபைகளுக்குமான மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானிய நிதிக்காக 52,500 மில்லியன் ரூபாயும், பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக 25,000 மில்லியன் ரூபாயும் ஒதுக்கப்படும் என்ற எதிர்வு கூறலின்படி, ஒவ்வொரு மாகாணத்தினாலும் 2025 ஆம் ஆண்டிற்காக எதிர்பார்க்கப்படும் ஒதுக்கீடுகளை நிதி ஆணைக்குழு அறியப்படுத்தியுள்ளது.*

***vi. 2025 ஆம் ஆண்டுக்கான வருடாந்த மாகாண அபிவிருத்தித் திட்டங்களை (ADPs) தயாரிப்பதற்கான வழிகாட்டல்களை வெளியிடல்***

*2025 ஆம் ஆண்டிற்கான வருடாந்த மாகாண அபிவிருத்தித் திட்டங்களை (ADPs) தயாரிப்பதற்கான வழிகாட்டல்களுடன் தொடர்புடைய மாதிரிப்படிவங்கள் தயாரிக்கப்பட்டு, 2024 டிசம்பர் 29 ஆம் திகதியன்று அனைத்து மாகாணங்களதும் பிரதம செயலாளர்களுக்கு அனுப்பப்பட்டன. 2025 ஆம் ஆண்டிற்கு மாகாண சபைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை சிறந்த முறையில் பயன்படுத்துவதற்காக வருடாந்த அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிப்பதற்கு இவ்வழிகாட்டல்கள் துணை புரிகிறது.தேசிய கொள்கை சட்டகம் மற்றும் மாகாணங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளின் முன்னுரிமையின் அடிப்படையில் குறித்த மாகாண சபைகளினால் தயாரிக்கப்பட்ட நடுத்தர கால அபிவிருத்தித் திட்டங்களுக்கமைவாக மாகாணத்திற்குரிய வருடாந்த அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டன.*

***vii. 2025 ஆம் ஆண்டுக்கான பராமரிப்பு செயற்றிட்டத்தினைத் தயாரிப்பதற்கான வழிகாட்டல்களை வெளியிடல்***

*2025 ஆம் ஆண்டுக்காக பராமரிப்பு செயற்றிட்டத்தினைத் தயாரிப்பதற்கும் செயற்படுத்துவதற்குமான வழிகாட்டல்கள் தயாரிக்கப்பட்டு 2024 டிசம்பர் 31 ஆந்தினத்தன்று அனைத்து மாகாணங்களினதும் பிரதம செயலாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. இந்த ஒதுக்கீடானது பொதுமக்களுக்கு நேரடியான நன்மைகளை வழங்கும் மாகாணங்களின் அபிவிருத்தியுடன் தொடர்புடைய பராமரிப்பு நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்படவுள்ளது.*

***2.1.2. மாகாண மீண்டெழும் பாதீட்டுடன் தொடர்புடைய விடயங்கள்***

***i. 2025 ஆம் ஆண்டுக்கான மீண்டெழும் பாதீட்டு வழிகாட்டல்களை வெளியிடல்***

*2025 ஆம் ஆண்டிற்கான மீண்டெழும் தேவைகளுக்கான மதிப்பீடு குறித்த வழிகாட்டல்களை 2024 பெப்ரவரி 12 ஆம் திகதியன்று மாகாண சபைகளுக்கு வெளியிட்டதன் மூலம் இச்செயன்முறை தொடங்கியது. இவ்வழிகாட்டல்கள் முக்கியமாக ஆளுக்குரிய வரும்படிகள், ஏனைய மீண்டெழும் செலவினம் (ORE), உள்ளூராட்சி மன்றங்களுக்கான மாற்றல்கள் ஆகியவற்றை மதிப்பீடு செய்தல் மற்றும் மாகாணங்களின் வருமானத்தினை மதிப்பீடு செய்தல் போன்றவற்றினை அடிப்படையாகக் கொண்டது. இவ்வழிகாட்டல்களுக்கு அமைவாக மாகாண சபைகள் மானிய நிதிக்கான தங்கள் கோரிக்கைகளை முன்வைக்கும் போது பூர்த்தி செய்யப்படாத தேவையான மாதிரிப்படிவங்களின் தொகுப்பொன்றும் அனுப்பி வைக்கப்பட்டது.*

***ii. 2025 ஆம் ஆண்டுக்கான மாகாண மீண்டெழும் தேவைகளை மதிப்பிடல்***

*வழிகாட்டல்களுடன் இணைக்கப்பட்டுள்ள கால அட்டவணையின்படி, மாகாண சபைகள் உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட படிவங்களில் தங்களது மீண்டெழும் தேவைப்பாடுகளை நிதி ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்தன. இதன் பெறுபேறாக, 2025 ஆம் ஆண்டுக்கான மாகாண மீண்டெழும் தேவைப்பாடுகள் மாகாண அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து மதிப்பிடப்பட்டன. இந்நோக்கத்திற்காக, பிரதம செயலாளர்கள், பிரதிப் பிரதம செயலாளர்கள், மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் மாகாண வரவு செலவுத் திட்ட பணிப்பாளர்கள் உள்ளிட்ட மாகாண அதிகாரிகளின் பங்குபற்றலுடன் பல சந்திப்புகள் நடாத்தப்பட்டன. தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம், முகாமைத்துவ சேவைகள் திணைக்களம், திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் மற்றும் தேசிய திட்டமிடல் திணைக்களம் ஆகியவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகளும் இக்கூட்டங்களில் பங்கேற்றனர்.*

*மீண்டெழும் தேவைப்பாடுகளின் மதிப்பீடு குறித்த வருடாந்த வரவு செலவுத்திட்ட கலந்துரையாடல்கள் இடம்பெற்ற தினங்களின் அட்டவணை கீழே காட்டப்பட்டுள்ளது.*

***அட்டவணை 04: வருடாந்த பாதீட்டு கலந்துரையாடல்கள் நடத்தப்பட்ட தினங்கள்***

| *மாகாணம்* | *கலந்துரையாடல் மேற்கொண்ட தினங்கள்* |
|---|---|
| *மத்திய* | *2024.06.13* |
| மேல் | *.2024.06.14* |
| *தென்* | *2024.06.18* |
| *வடமேல்* | *2024.06.19* |
| *வடமத்திய* | *2024.06.20* |
| *வட* | *2024.06.24* |
| *சப்ரகமுவ* | *2024.06.25* |
| *கிழக்கு* | *2024.06.26* |
| *ஊவா* | *2024.06.27* |

***iii. மாகாணங்களின் மீண்டெழும் தேவைகள் மீதான பரிந்துரைகளை பொது திறைசேரிக்குத் தெரியப்படுத்தல்***

*மாகாண அதிகாரிகளுடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்களின் பின்னர், 2025 ஆம் ஆண்டுக்கான தேசிய வரவு செலவுத்திட்டத்தினைத் தயாரிப்பதற்காக, மாகாண மீண்டெழும் தேவைகள் முடிவு செய்யப்பட்டு, நிதி ஆணைக்குழுவின் ஒப்புதலுடன் பொதுத் திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்பட்டன. மாகாண சபைகளுக்கான பரிந்துரைக்கப்பட்ட திரள் மானிய நிதி 578,084 மில்லியன் ரூபாயாக 2024.08.27 தினத்தன்று பொது திறைசேரிக்கு தெரியப்படுத்தப்பட்டது. (வருமான மாற்றல்கள், எதிர்பாரா செலவு நிதியம் மற்றும் முற்பண பி கணக்கிற்கான கோரிக்கை ஆகியன உள்ளடங்கலாக)*

***iv. 2025 ஆம் ஆண்டில் மாகாணங்களுக்கு முதல் நான்கு மாதங்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகைகளைத் தெரிவித்தல்.***

*2025 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களுக்குமான வாக்குப்பணக் கணக்கின் மீதான ஒப்புதலுக்கிணங்க அரசாங்க நடவடிக்கைகளைத் தடையின்றி முன்னெடுப்பதற்கு, நிதி ஆணைக்குழு 2024.12.21 தினத்தன்று மீண்டெழும் செலவுக்கான மாகாணங்களுக்குரிய ஒதுக்கீட்டுத் தொகைகளை மாகாண சபைகளுக்கு அறிவித்தது. 2025 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களுக்கான வாக்குப்பணக் கணக்கின் கீழ் ஒதுக்கப்பட்ட மீண்டெழும் செலவினது மொத்தத்தொகை 157,696 மில்லியன் ரூபாயாகும்.*

***v. 2024ஆம் ஆண்டுக்கான மேலதிக ஒதுக்கீட்டினை (குறைநிரப்பு) பரிந்துரை செய்தல்***

*முக்கியமாக கொடுப்பனவுகளின் மீளாய்வு, புதிய கொடுப்பனவுகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் நிரல் அமைச்சுக்களால் ஆளணியினரை இணைத்தல் மற்றும் வரவு செலவுத்திட்ட ஒதுக்கீட்டிற்குப் பின்னரான புதிய ஆட்சேர்ப்புகள் காரணமாக எழுந்த மேலதிக ஒதுக்கீட்டுத் தேவைப்பாட்டுக்காக மாகாண சபைகளினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் (குறைநிரப்பு மதிப்பீடு) பரிந்துரை செய்யப்பட்டு பொதுத் திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்பட்டன. 2024 ஆம் ஆண்டில், பரிந்துரைக்கப்பட்ட குறைநிரப்பு ஒதுக்கீட்டுத் தொகைகள் பின்வருமாறு.*

*அட்டவணை 05: பரிந்துரைக்கப்பட்ட குறைநிரப்பு ஒதுக்கீடு – 2024*

(ரூ.'000)

| திகதி | நிரல் அமைச்சுக்களுக்கு இணைப்பதற்காக பரிந்துரைக்கப்பட்ட மேலதிக (குறைநிரப்பு) ஒதுக்கீடு | குறைநிரப்பிற்கான புதிய பரிந்துரை | மொத்த குறைநிரப்புத் தொகையாகக்கான பரிந்துரை |
|---|---|---|---|
| *2024.06.24* | *531,094* | *47,396,149* | *47,927,243* |
| *2024.10.11* | *90,114* | *917,846* | *1,007,960* |
| மொத்தம் | ***621,208*** | ***48,313,995*** | ***48,935,203*** |

***vi. 2025 ஆம் ஆண்டுக்காக மாகாண வருமானத்தினை மதிப்பீடு செய்தல்***

*2024 பெப்ரவரி 12 ஆந்தினத்தன்று, நிதி ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட மீண்டெழும் செலவுக்கான வழிகாட்டலின்படி, மாகாண சபைகள் தங்களது மதிப்பிடப்பட்ட வருமான இலக்குகளை சமர்ப்பித்தோடு அவை நிதி ஆணைக்குழுவினால் பகுப்பாய்வு செய்யப்பட்டு மதிப்பிடப்பட்டன.*

*இறைக் கொள்கைத் திணைக்களத்தினால் ஒப்புக்கொண்ட மாகாண வருமான இலக்குகள் மற்றும் அரசாங்க வருமான மாற்றல்களின் அடிப்படையில் நிதி ஆணைக்குழு 2025 ஆம் ஆண்டிற்கான மாகாண வருமானத்தினை மதிப்பிட்டது. 2025 ஆம் ஆண்டிற்கான மாகாண மீண்டெழும் தேவைகளை மதிப்பிடுவதற்காக, உரிய மாகாண அதிகாரிகளின் பங்குபற்றலுடன் மேற்குறிப்பிட்ட அட்டவணை 04 இல் காட்டப்பட்டுள்ள கூட்டங்களின் மூலம் நிதி ஆணைக்குழுவினால் மாகாண வருமான இலக்குகள் மீளாய்வு செய்யப்பட்டன.*

***vii. மாகாண சபைகளுக்கான மீண்டெழும் மற்றும் மூலதனத் தேவைப்பாடுகளுக்கான கட்டுநிதி விடுவிப்பினைப் பரிந்துரைத்தல்.***

*2023.12.29 திகதியிட்ட தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கை எண்.05/2023 இன் பிரகாரம் மாகாண சபைகள் தனிச் செலவின அலகுகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதால், வரவு செலவுத்திட்ட நடவடிக்கைகள் மற்றும் ஏனைய இடைநேர் விளைவான விடயங்கள் தொடர்பாக பிரதம செயலாளர்கள் பாராளுமன்றத்திற்கு நேரடியாகப் பொறுப்புக் கூறல் வேண்டும். இதற்கமைவாக, திறைசேரி செயற்பாடுகள் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் TO/BE4/01/07/06 இலக்க 2024.03.06 ஆம் திகதியுடைய கடிதத்திற்கமைய, 2024 ஆம் ஆண்டு முழுவதற்குமான மீண்டெழும் மற்றும் மூலதனத் தேவைகளுக்காக கட்டுநிதி விடுவிப்பினை நிதி ஆணைக்குழு பரிந்துரைத்தது.*

### ***2.1.3. முன்னுரிமையான சில விடயங்கள் தொடர்பில் நடாத்தப்பட்ட குறிப்பிடத்தக்க கூட்டங்கள் மற்றும் கள விஜயங்கள்***

* *உள்ளூராட்சி வருமான மூலங்கள் குறித்து சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) பிரதிநிதிகளுடன் 2024 பெப்ரவரி 15 ஆந்திகதியன்று ஒரு கலந்துரையாடல் நடைபெற்றது.*

* *விசேட அபிவிருத்தி கருத்திட்டங்களின் கீழ் வழங்கப்படும் ஒதுக்கீடுகளுக்கான கருத்திட்ட முன்மொழிவுகளைத் தயாரிப்பது தொடர்பாக நிதி ஆணைக்குழுவின் செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளுடன் ஒன்பது மாகாண சபைகளினதும்*

பிரதிப் பிரதம செயலாளர்களின் (திட்டமிடல்) பங்குபற்றலுடன் 2024 மார்ச் 06 ஆம் திகதி ஸூம் நிகழ்நிலைக் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

* மாகாண சபை ஊழியர்களினது தனிப்பட்ட வேதனாதிகளை மதிப்பிடுவதில் பயன்படுத்தப்படும் முறைமை குறித்து கற்கை மேற்கொள்வதற்காக உலக வங்கியின் பிரதிநிதிகள் 2024 யூன் மாதம் 26 ஆந்திகதியன்று நிதி ஆணைக்குழுவிற்கு விஜயம் செய்தனர். இக் கலந்துரையாடல்களில் தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களம் மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

* மத்திய அரசின் மற்றும் உள்ளூராட்சி அமைப்புக்களில் சொத்து வரி வருமானத்தின் வகிபாகம் குறித்த கலந்துரையாடல் 2024 யூன் மாதம் 28ஆந்திகதியன்று ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) பிரதிநிதிகளின் பங்கேற்புடன் நடைபெற்றது.

* நிதி ஆணைக்குழுவின் தலைவர், செயலாளர் மற்றும் தொடர்புடைய அதிகாரிகளுடன், வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம், மேலதிக பணிப்பாளர் நாயகம், மற்றும் சிரேஷ்ட அதிகாரிகள் தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகம் ஆகியோரின் பங்குபற்றலுடன் வெளிநாட்டு நிதியுதவியுடனான கருத்திட்டங்கள் குறித்த கலந்துரையாடல், 2024 ஆகஸ்ட் 12 ஆந்திகதி நிதி ஆணைக்குழுவில் நடைபெற்றது.

* நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புத் துறையில் உள்ள சில முக்கியமான பிரச்சினைகள் குறித்து விவாதிக்க நிதி ஆணைக்குழுவின் தலைவர், செயலாளர் மற்றும் தொடர்புடைய அதிகாரிகளுடன் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினதும் தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்தினதும் அதிகாரிகள், நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் ஆணையாளர் மற்றும் ஒன்பது மாகாணங்களினதும் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகளின் மாகாண ஆணையாளர்கள் ஆகியோரின் பங்குபற்றலுடனும் ஒரு கூட்டம் 2024 நவம்பர் 22 ஆந்திகதியன்று நிதி ஆணைக்குழுவில் நடத்தப்பட்டது.

* மத்திய மாகாணத்தில் விசேட அபிவிருத்தி கருத்திட்டங்களின் ஒதுக்கீட்டின் கீழ் முன்னெடுக்கப்படும் கருத்திட்டங்களைக் கண்காணிப்பதற்காக, நிதி ஆணைக்குழுவின் செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளின் பங்குபற்றலுடன், 2024 ஆகஸ்ட் 16 ஆந்திகதியன்று கள விஜயமொன்று மேற்கொள்ளப்பட்டது.

* முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் மற்றும் நிதி ஆணைக்குழு அதிகாரிகளின் பங்குபற்றலுடன், ஆதார வைத்தியசாலையாக இருந்து மாவட்ட வைத்தியசாலையாக தரமுயர்த்தப்பட்ட ஹொரணை ஆதார வைத்தியசாலைக்கான மேலதிக ஆளணித் தேவைப்பாட்டினை மதிப்பிடுவதற்கான 2024 செப்டெம்பர் 13ஆந்திகதியன்று கள விஜயமொன்று மேற்கொள்ளப்பட்டது.

### 2.1.4. 2023 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கையினை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்

2020.08.28 ஆந்திகதியின் அரச நிதிச் சுற்றறிக்கை எண் 02/2020 இன் பிரகாரம், 2023 ஆம் ஆண்டிற்கான நிதி ஆணைக்குழுவின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையானது, பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக மாண்புமிகு பிரதமர் அவர்களின் அனுமதியினைப் பெறுவதற்கு, 2024 மே 28 தினத்தன்று சனாதிபதி செயலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அதன்படி, மாண்புமிகு பிரதமர் அவர்களின் ஒப்புதலுடன், அறிக்கையானது 2024 யூன் 18 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இவ்வறிக்கையில் நிதி ஆணைக்குழுவின்

*கண்ணோட்டம், முக்கிய செயற்பாடுகள், நிதி முன்னேற்றம் மற்றும் இணக்க அறிக்கை தொடர்பில் 2023 ஆம் ஆண்டில் நிறுவனத்தின் செயல்திறன் ஆகியவை உள்ளடங்கும். இவ்வறிக்கை அரச நிதித் திணைக்களத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட்டது.*

### *2.1.5.* கௌரவ ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரைகள் தொடர்பான விடயங்கள்

*i.* ***2025* ஆம் ஆண்டுக்கான நிதி ஆணைக்குழுவின் வருடாந்த பரிந்துரைகளைத் தயாரித்து கௌரவ ஜனாதிபதி அவர்களிடம் சமர்ப்பித்தல்.**

*அரசியலமைப்பின் உறுப்புரை 154ண (4) இன் பிரகாரம், நிதி ஆணைக்குழு 2025 ஆம் ஆண்டிற்கான தனது வருடாந்த பரிந்துரையினை தயாரித்து 2024 டிசம்பர் 30 ஆம் தினத்தன்று கௌரவ ஜனாதிபதி அவர்களிடம் சமர்ப்பித்தது.இவ்வறிக்கை 2025ஆம் ஆண்டிற்கான மாகாண சபைகளின் மதிப்பிடப்பட்ட நிதித் தேவைகள் தொடர்பான பரிந்துரைகளையும் சமநிலையான பிராந்திய அபிவிருத்தியினை அடைவதற்காக, வருடாந்த வரவு செலவுத் திட்டத்திலிருந்து மாகாணங்களுக்கிடையே ஒதுக்கப்படும் நிதியைப் பகிர்ந்தளிப்பது குறித்த கொள்கைகளையும் உள்ளடக்கியுள்ளது.*

*அதன்படி, அரசியலமைப்பின் உறுப்புரை 154ண (3) இன் பிரகாரம், 2025 ஆம் ஆண்டுக்காக மாகாண சபைகளின் மூலதனம் மற்றும் மீண்டெழும் தேவைகளுக்கு தேசிய பாதீட்டிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்வது தொடர்பான பரிந்துரைகளை நிதி ஆணைக்குழு அரசாங்கத்திடம் சமர்ப்பித்தது. எதிர்பார்க்கும் வருமானத்தினை சீராக்கிய பின்னர், 2025 ஆம் ஆண்டிற்கான மாகாணக் குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானிய நிதியாக ரூ. 133,681 மில்லியனும், பிரமாண அடிப்படையிலான மானிய நிதியாக ரூ. 18,000 மில்லியனும் பரிந்துரைக்கப்பட்டது. அதற்கமைய, எதிர்வுகூறப்படும் வருமான இலக்குகளை சீராக்கிய பின்னர், 2025 ஆம் ஆண்டிற்கான மாகாண சபைகளுக்கு பரிந்துரைக்கப்பட்ட மொத்த மூலதன மானியங்கள் ரூ. 151,681 மில்லியனாகும். வருமான இலக்குகளை சீராக்கிய பின்னரான, முத்திரை தீர்வை மற்றும் நீதிமன்ற தண்டப்பணங்களைத் தவிர்த்து, மீண்டுவரும் தேவைகளுக்காக பரிந்துரைக்கப்பட்ட திரள் மானிய நிதி ரூ. 578,084.02 மில்லியனாக இருந்தது. இவ்வாறாக, மூலதன மற்றும் மீண்டுவரும் மானிய நிதிக்கான மொத்தத் தொகை ரூ. 729,765.02 மில்லியனாகும்.*

*அதே நேரம், மாகாண சபைகளுக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள பணிகளை வினைத்திறனாக முன்னெடுக்க உதவும் வகையில், அரசாங்கத்தின் ஒட்டுமொத்த அபிவிருத்தி உபாயத்திற்குத் துணைபுரிவதற்காக பின்பற்றக்கூடிய சில கொள்கைப் பரிந்துரைகளும் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.*

*அதன்படி, 2025ஆம் ஆண்டுக்காக கௌரவ ஜனாதிபதி அவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்ட நிதி ஆணைக்குழுவின் கொள்கைப் பரிந்துரைகளின் சுருக்கம் கீழே விபரிக்கப்பட்டுள்ளன.*

*(1)* **தேசிய மட்டத்திலும் மாகாண சபைகளினாலும் பல்வேறு பிரதேசங்களின் வளங்களை ஒழுங்குமுறையில் பகிர்ந்தளிப்பதற்கான கொள்கையொன்றினை ஏற்றுக்கொள்ளல்**

*முக்கிய சமூக-பொருளாதாரக் காரணிகளைக் கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்ட அறிவியல் சூத்திரத்தின் மூலம், பன்முகப்படுத்தப்பட்ட விடயங்களுக்காக ஒவ்வொரு மாகாணத்திற்கும் நிதி ஆணைக்குழுவினால் நிதி பரிந்துரைக்கப்பட்டாலும், மொத்த பாதீட்டு ஒதுக்கீட்டின் பெரும்பகுதியைச் செலவழிக்கும் முகவர்களாக இருக்கும் நிரல் அமைச்சுக்கள், தங்களுக்கு உரித்துடைய விடயங்களில் போதுமான நிதி ஒதுக்கீட்டு முறையினைப் பின்பற்றுவதில்லை. ஆகையால், நிரல் அமைச்சுக்களால் அத்தகைய அறிவியல் முறை/சூத்திரம் பயன்படுத்தப்படாத நிலையில், பிராந்தியங்களுக்கிடையிலான சமமான வளப் பங்கீட்டில் கவனம் செலுத்தி, சமநிலையான பிராந்திய அபிவிருத்தியினை அடைவது நடைமுறை சாத்தியமானதல்ல. எனவே, பல்வேறு பிராந்தியங்களின் அபிவிருத்திக்கான நிதிப்பகிர்வின்*

*போது நிதி ஆணைக்குழு (அதே சூத்திரத்தினைப் பயன்படுத்துவது அவசியமில்லை) பயன்படுத்தும் சூத்திரத்தைப் போன்றதொரு சூத்திரத்தை நிரல் அமைச்சுக்களும் பயன்படுத்துவது மிகவும் பொருத்தமானது என்று ஆணைக்குழு பரிந்துரைத்தது.*

***(2) தேசிய மற்றும் மாகாண மட்டங்களில் பொதுவானதும் ஒருங்கிணைந்ததுமான திட்டமிடல் பொறிமுறையொன்றினைப் பின்பற்றுவதன் தேவைப்பாடு***

*மாகாண வருடாந்த அபிவிருத்தித் திட்டங்களை தயாரிக்கும் போது இரட்டிப்பினைத் தவிர்ப்பதற்காக ஒரே மாதிரியான விடயங்களின் கீழ் நிரல் அமைச்சுக்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் ஒவ்வொரு மாகாணத்தினுள்ளும் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகள் உரியவாறு அடையாளம் காணப்படுகின்றது. எவ்வாறாயினும், நிரல் அமைச்சுக்கள் தனது அபிவிருத்தித் திட்டங்களை தயாரிப்பதில் அவ்வாறான வழிமுறை ஒன்றினைப் பின்பற்றாத காரணத்தினால், பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகள் இரட்டிப்படைவதால் வளங்கள் வீண்விரயமாவதை மீண்டும் மீண்டும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. ஆகையால், பிராந்திய அபிவிருத்தி தொடர்பாக கவனம் செலுத்தி மாகாண சபைகளினால் செயற்படுத்தப்படும் பொறிமுறைக்குச் சமமான பொதுவான அல்லது ஒருங்கிணைந்த திட்டமிடல் அணுகுமுறையினை நிரல் அமைச்சுக்களும் பயன்படுத்துவதற்கு நிதி ஆணைக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.*

***(3) மாகாண சபைகளுக்கு வழங்கப்படும் மூலதன மானிய நிதி பற்றாக்குறையாக காணப்படுகின்றமை***

*அரசியலமைப்பின் ஒன்பதாவது அட்டவணையின் பன்முகப்படுத்தப்பட்ட விடயங்களின் பட்டியலின் கீழ் மாகாண சபைகளுக்கான விடயங்களின் விரிவான பட்டியல் ஒதுக்கப்பட்டுள்ள போதிலும், பன்முகப்படுத்தப்பட்ட விடயங்களுக்கான மொத்த மூலதனச் செலவினத்தில் 15% மட்டுமே மாகாண சபைகள் மூலம் மாற்றப்படுகிறது, அதேநேரம் பெரும் பகுதியானது நிரல் அமைச்சுக்கள் மூலம் ஒதுக்கப்படுகிறது. இதன் விளைவாக, அபிவிருத்தி நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான தொழில்நுட்ப மற்றும் மனித வளங்கள் இருந்த போதிலும் மாகாண சபைகள் அத்தகைய பன்முகப்படுத்தப்பட்ட விடயங்களுக்கு போதியளவிலான நிதி ஒதுக்கீட்டின்றி தவிக்கின்றன. எனவே, நிதி ஆணைக்குழு, பன்முகப்படுத்தப்பட்ட விடயங்களுக்காக நிரல் அமைச்சுக்களுக்கென ஒதுக்கப்படும் நிதியை மேலதிக செலவுகள் ஏதுமின்றி மாகாண சபைகளுக்கே மீள விடுவிக்குமாறு பரிந்துரைத்துள்ளது. இவ்விடயம் தொடர்பாக நிதி ஆணைக்குழு கௌரவ ஜனாதிபதி அவர்களது கவனத்தைத் திருப்புமாறு கோரியுள்ளது.*

***(4) வெளிநாட்டு நன்கொடைகளின் கீழ் செயல்படுத்தப்படும் பல்வேறு கருத்திட்ட நடவடிக்கைகளை வருடாந்த அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் முழுமையாக உள்ளடக்குவதற்கான தேவைப்பாடு.***

*பெரும்பாலான சந்தர்ப்பங்களில், பன்முகப்படுத்தப்பட்ட விடயங்களின் கீழ் வரும் அபிவிருத்தி நடவடிக்கைகள், பெற்றுக்கொள்ளக்கூடிய மாகாண மட்ட பொறிமுறைகள் மற்றும் வளங்களைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக, நிரல் அமைச்சுக்களால் பல்வேறு வெளிநாட்டு நன்கொடைகளின் மூலம் செயற்திட்ட அலுவலகங்கள் மற்றும் ஏனைய தேவைப்பாட்டு வசதிகளுக்கு அதிக செலவினங்களை மேற்கொள்கின்றன. எனவே, வெளிநாட்டு நன்கொடைகள் மூலம் நிதியளிக்கப்படும் இத்தகைய அபிவிருத்தி நடவடிக்கைகள் இரட்டிப்பு மற்றும் வள வீண்விரயமின்றி ஒப்பீட்டளவில் குறைந்த செலவில் செயற்படுத்துவதற்கு மாகாண அபிவிருத்தித் திட்டங்களுடன் ஒருங்கிணைப்பதற்கு நிதி ஆணைக்குழு பரிந்துரை செய்துள்ளது.*

**(5) *பெறுகை நடவடிக்கைகளைத் தவிர்த்து சமூக மட்டத்திலான அமைப்புக்களுக்கு நேரடி ஒப்பந்தங்களை வழங்கும் தற்போதைய நடைமுறை தொடர்பில் மறுபரிசீலனை செய்வதன் தேவைப்பாடு***

*மதிப்பிடப்பட்ட செலவுடன் ஒப்பிடும்போது, கிராமப்புற சமூகத்தின் ஊழியப் பங்களிப்பு மற்றும் மேற்பார்வையின் மூலம் அத்தகைய திட்டங்களின் மூலம் உருவாக்கப்படும் சொத்துக்களின் பெறுமதியினை அதிகரிக்கும் நோக்கத்துடன் சமூக மட்டத்திலான அமைப்புக்களுக்கு சிறிய அளவிலான அபிவிருத்தித் திட்டங்களில் நேரடி ஒப்பந்தங்களை வழங்கும் நடைமுறை ஆரம்பிக்கப்பட்டது.எவ்வாறாயினும், ஒப்பந்தப் பெறுமதியின் எல்லையினை 2 மில்லியனில் இருந்து 5 மில்லியனாக உயர்த்தியமை, அத்தகைய ஒப்பந்தங்களில் ஈடுபட தகுதியான அமைப்புக்களின் எண்ணிக்கை 8 இலிருந்து 13 ஆக உயர்ந்தமை, மற்றும் உள்ளூர் அரசியல்வாதிகளின் நேரடி தலையீடு காரணமாக திட்டங்கள் பிரிக்கப்பட்டு அச்செயல்முறையினை நியாயமற்ற முறையிலான இலாப நோக்குடைய வியாபாரமாக மாற்றும் நிலை உருவானது.இதன் விளைவாக, தரமற்ற வெளியீடுகள் உருவாகியதுடன் அரச நிதி வீண்விரயமாக்கப்பட்டது. ஆகையால், சமூக மட்டத்திலான அமைப்புக்களுக்கு சிறிய அளவிலான உட்கட்டமைப்பு திட்டங்களை வழங்கும் இந்நடைமுறையினை மறுபரிசீலனை செய்ய நிதி ஆணைக்குழு பரிந்துரைத்தது.*

**(6) *மாகாண ஆளணியை மிகவும் ஒழுங்கமைப்புள்ள அடிப்படையின் கீழ் சேவையில் ஈடுபடுத்தல்***

*தற்போது பெரும்பாலான அரச நிறுவனங்களில் மேலதிகமான ஆளணி காணப்பட்ட போதிலும், பல நிறுவனங்களில் பெருமளவிலான வெற்றிடங்கள் காணப்படுகின்றமை மாகாண மட்டத்தில் (மற்றும் பொதுவாக அரச சேவையிலும்) அந்நிறுவனங்களின் வினைத்திறனான சேவை வழங்கலில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆகையால், தேவையான நிறுவனங்களின் பதவி வெற்றிடங்களுக்காக அவ்வாறான மிகை ஆளணியினரை மீளப்பணிக்கமர்த்துவதற்கு நிதி ஆணைக்குழு முன்மொழிந்துள்ளது. சில நடவடிக்கைகள் வெளி நிறுவனங்களுக்கு பொறுப்பளிக்கப்படல், மேம்படுத்தப்பட்ட போக்குவரத்து வலையமைப்பு, தொடர்பாடல் வழிமுறைகள், சேவை வழங்கும் நிலையங்களின் (பிரதேச / வலய) பூகோள ரீதியான அமைவிடங்களை அறிவார்ந்த முறையில் ஒழுங்கமைப்பதன் அவசியம் மற்றும் புதிய தொழில்நுட்பத்தினை பின்பற்றுதல் போன்ற அரச சேவையின் அண்மைக்கால முன்னேற்றங்கள் மற்றும் சமகால போக்குகளைக் கருத்தில் கொண்டு, ஒரு விரிவான ஆளணி மீளாய்வின் மூலம் அரச துறைக்கான மனிதவலுத் தேவையினை மறுபரிசீலனை செய்ய நிதி ஆணைக்குழு பரிந்துரைத்தது.*

**(7) *உள்ளூராட்சி மன்றங்களின் வருமானமீட்டும் செயற்பாடு உள்ளிட்ட செயற்திறனை மேம்படுத்துவதற்காக அந்நிறுவனங்களின் சட்டவியல் கட்டமைப்பினை வலுப்படுத்தல்***

*வருமான உருவாக்கத்தினை மேம்படுத்துவதற்காகவும் உள்ளூராட்சி மன்றங்களின் செயலாற்றுகையினை மேம்படுத்தவும், உள்ளூராட்சி மன்றங்களின் சட்டவியல் கட்டமைப்பினை வலுப்படுத்தவும் நிதி ஆணைக்குழு பரிந்துரைத்தது. அச்செயற்பாட்டின் மூலம், வருமானப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும், முதலீட்டாளர்களின் நம்பிக்கையை மேம்படுத்துவதற்குமான நடைமுறைகளை நெறிப்படுத்துவதற்கும், மத்திய சுற்றாடல் அதிகாரசபை போன்ற சில ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தினை தெளிவாக வரையறுப்பதற்கும், சேவைகளை வழங்கலை மேம்படுத்துவதற்கான சட்டங்கள் போன்றவற்றில் திருத்தங்கள் தேவை என்று பாரியளவில் கருதப்பட்ட மாநகர சபை கட்டளைச் சட்டம், நகர சபை கட்டளைச் சட்டம் மற்றும் பிரதேச சபைச் சட்டம் ஆகியவற்றில் திருத்தங்கள் மேற்கொள்ள பரிந்துரைக்கப்பட்டுள்ளது. பல வருடங்களுக்கு முன்னர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட சட்ட முன்வரைவுகள், மேற்கூறிய உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பான சட்டங்கள், நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைத் தீர்வைகளை மாகாண சபைகளின் மூலம் நேரடியாக உள்ளூராட்சி மன்றங்களுக்கு மாற்றுவதற்கான ஏற்பாடுகளை உள்ளடக்கியதன் அவசியத்தை நிதி ஆணைக்குழு வலியுறுத்தியது. மேலும், விசர்நாய்க்கடி நோய் கட்டுப்பாடு மற்றும் நாய்களை*

*பதிவு செய்தல் தொடர்பான சட்டத்தை திருத்துதல், உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்களின் எண்ணிக்கையை மீளாய்வு செய்தல் ஆகியனவும் பரிந்துரைகளில் முன்வைக்கப்பட்டுள்ளன.*

**(8) போதியளவு ஆசிரியர் எண்ணிக்கையினைக் கொண்டிராத மாகாண பாடசாலைகள்**

*தகுதியும் அனுபவமும் வாய்ந்த ஆசிரியர்கள் கிடைப்பதில் மாகாணப் பாடசாலைகளுக்கும் தேசியப் பாடசாலைகளுக்கிடையே ஒரு முக்கியமான ஏற்றத்தாழ்வு நிலவுவதை அவதானிக்க முடிகிறது. தேவையான தொழில்சார் கல்வித்தகைமைகள் மற்றும் அனுபவமுள்ள ஆசிரியர்கள் தேசிய பாடசாலைகளில் குவிக்கப்பட்டுள்ள அதேவேளையில் மாகாண பாடசாலைகளில் அத்தகைய ஆசிரியர்களுக்கான பாரிய பற்றாக்குறை காணப்படுகிறது. விசேடமாக, விஞ்ஞானம், கணிதம் மற்றும் ஆங்கிலம் மற்றும் உயர்தர வகுப்புக்களுக்கான பாடங்களில், இப்பிரச்சினை மிகவும் முதன்மையானதாக மாறியுள்ளதோடு மாகாணப் பாடசாலைகளால் பயன்படுத்தப்படும் தற்காலிக தீர்வுகள் இதற்கு சாத்தியமானதாக இல்லை. தேசிய பாடசாலைகளில் மேலதிகமாக உள்ள ஆசிரியர்களை மாகாண பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்வதே மேற்படி பிரச்சினைகளுக்குரிய தீர்வாகக் காணப்பட்டாலும், மாகாண சபைப் பட்டியலுக்கும் அரசியலமைப்பின் ஒருங்கியைப் பட்டியலுக்கும் இடையில் கல்வி விடயத்தினை வரையறுப்பதன் மூலம் இத்தகைய இடமாற்றம் மிகவும் கடினமாகிவிட்டது. ஆகையால், நிதி ஆணைக்குழு பின்வரும் பரிந்துரைகளை முன்வைத்தது.*

*(அ) தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளுக்கிடையில் ஆசிரியர்களை சமநிலைப்படுத்துவது தொடர்பில் அமைச்சரவையினால் கொள்கை முடிவொன்றை எடுத்தல்.*

*(ஆ) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்ட சில நிபந்தனைகள் மற்றும் நடைமுறைகளுக்கு உட்பட்டு அரசியலமைப்பின் உறுப்புரை 57(1)ன் பிரகாரம் தேசிய பாடசாலைகளிலிருந்து மாகாண பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை இடமாற்றம் செய்வது தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழு தனது அதிகாரத்தை மாகாண மட்டத்திற்கு வழங்குதல்.*

*(இ) மேற்கூறிய பிரச்சினைக்கு மிகவும் சாத்தியமான தீர்வுகளைப் பரிந்துரைப்பதற்காக, சட்டமா அதிபர் திணைக்களத்தின் பிரதிநிதிகள் மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பிரதிநிதிகளுடன் ஏற்புடைய சிரேஷ்ட அதிகாரிகளைக் கொண்ட குழுவொன்றினை அமைத்தல்.*

*(ஈ) அரசியலமைப்பின் மாகாண சபை பட்டியல் பின்னிணைப்பு III இன் 9 வது இணைப்பினது ஏற்பாடுகளின்படி மாகாண கல்விச் சபைகளை ஏற்படுத்தல்.*

**(9) குறைந்த எண்ணிக்கையிலான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளை மறுசீரமைப்பதன் மூலம் கிராமிய மற்றும் பெருந்தோட்டப் பிரதேசங்களில் கல்வி வசதிகளை மேம்படுத்த வேண்டியதன் தேவைப்பாடு**

*கிராமிய மற்றும் பெருந்தோட்டப் பகுதிகளில் குறைந்த எண்ணிக்கையிலான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள் பிள்ளைகளுக்கு சிறந்த கல்வி வாய்ப்புகளை மேம்படுத்துவதற்கு போதிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்பது அவதானிக்கப்படுகிறது. 2022 ஆம் ஆண்டில், 50க்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட 1402 பாடசாலைகள் காணப்பட்டதாக இனங்காணப்பட்டுள்ளதுடன், கொழும்பின் நகர்ப் பகுதிகளிலும் அவ்வாறான பாடசாலைகள் காணப்பட்டன. எவ்வாறாயினும், சில சந்தர்ப்பங்களில் அப்பாடசாலைகளிலுள்ள ஆசியர்களின் எண்ணிக்கை மாணவர்களின் எண்ணிக்கையிலும் அதிகமாக உள்ளதோடு, அதிக எண்ணிக்கையிலான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளுடன் ஒப்பிடுகையில், ஒரு மாணவருக்காக ஏற்றுக்கொள்ளும் செலவினம் அதிகரிப்பதற்கும் வழிவகுத்துள்ளது. மேலும் அத்தகைய பாடசாலைகளில் கற்பதற்கான சூழல் குறைவான தரத்திலே உள்ளது. அப்பாடசாலைகளில் பெரும்பாலானவை, சிறந்த கற்றல் சூழலை பெறுவதற்காக அதிக எண்ணிக்கையிலான*

*மாணவர்கள் மற்றும் அதிக வசதிகளைக் கொண்ட அருகிலுள்ள பாடசாலைகளுடன் இணைக்கப்படலாம். இதன்மூலம், ஏனைய கிராமிய பாடசாலைகளிலுள்ள வெற்றிடங்களுக்கு சுமார் 7,000 ஆசிரியர்களை விடுவிக்க முடியும். எனவே, மாணவர்களுக்கான சிறந்த கற்றல் சூழலை உறுதிசெய்யவும், செலவைக் குறைக்கவும், ஆசிரியர்களை ஒழுங்கமைப்பாக பணிக்கு அமர்த்துவதன் மூலம் குறைந்த எண்ணிக்கையிலான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளை மறுசீரமைக்க அரசு கொள்கைத் தீர்மானமொன்றினை மேற்கொள்ள வேண்டுமென நிதி ஆணைக்குழு முன்மொழிந்தது.*

***(10) நிறுவனமயப்படுத்தப்பட்ட சிறுவர்கள் தொடர்பில் முன்வைக்கப்படும் முன்மொழிவுகள்***

*இப்பரிந்துரையில், மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு திணைக்களங்கள் மற்றும் பல்வேறு அரச சார்பற்ற நிறுவனங்களால் நிர்வகிக்கப்படும் நிறுவனங்களின் பராமரிப்பில் உள்ள சிறுவர்கள் மற்றும் சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் வரும் பல்வேறு தடுப்புக்காவல் இல்லங்களில் உள்ள ஆண்கள் மற்றும் பெண்கள் குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது. சமூக சேவைகள் மற்றும் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு ஆகியவை அரசியலமைப்பின் கீழ் பன்முகப்படுத்தப்பட்ட விடயங்களாக இருந்தாலும், மாகாண சபைகளுக்கான குறைந்த நிதிப் பாய்ச்சல் காரணமாக, இவ்விடயங்களுக்கான நிதி பற்றாக்குறையாக உள்ளது. இதனால் மனித மற்றும் பௌதீக வளங்களின் பற்றாக்குறை காணப்படுவது அக்குறிப்பிட்ட நிறுவனங்களின் திருப்தியற்ற சேவை வழங்கலுக்கு வழிவகுக்கின்றது.*

*இப்பின்னணியில், குறிப்பிட்ட நிறுவனமயமாக்கப்பட்ட சிறுவர்களுக்கான சிறந்த எதிர்காலத்தை உறுதி செய்வதற்காக, நிதி ஆணைக்குழு, அரசாங்கத்தின் நேரடி தலையீட்டின் முக்கியத்துவத்தை கருத்திற் கொள்கிறது. அதற்காக நிதி ஆணைக்குழுவினால் பின்வரும் பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன;*

*(i) சிறுவர்கள் மற்றும் இளம்பராயத்தினர் தொடர்பான 1939 ஆம் ஆண்டு 48ஆம் இலக்க கட்டளைச் சட்டம், 1941 ஆம் ஆண்டு 24ஆம் இலக்க சிறுவர் மகவேற்புக் கட்டளைச் சட்டம், 1998 ஆம் ஆண்டு 50ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டம், 1978 ஆம் ஆண்டு 2ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1841 ஆம் ஆண்டு 4 ஆம் இலக்க வேலையற்று வெட்டியாகத் திரிபவர்களுக்கான கட்டளைச்சட்டம், 1907 ஆம் ஆண்டு 5 ஆம் இலக்க நிவர்தன வீடமைப்புக் கட்டளைச் சட்டம் போன்ற இவ்விடயப்பரப்பு தொடர்பான சட்டங்களைத் திருத்துவதற்காக அல்லது ஒருங்கிணைத்தல்.*

*(ii) அந்நிறுவனமயமாக்கப்பட்ட சிறுவர்களின் நல்வாழ்வை உறுதி செய்வதற்காக மேற்கூறிய நிறுவனங்களுக்கு நன்கு அனுபவம் வாய்ந்த மற்றும் தொழில்சார் தகைமையுடைய இல்லத்தாய் மற்றும் துணை ஊழியர்களை நியமிக்க புதிய ஆட்சேர்ப்பு மற்றும் வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பான அரசாங்கக் கொள்கையைத் தளர்த்துதல்.*

*(iii) குறைந்தபட்ச அத்தியாவசிய வசதிகள் கூட இல்லாது தற்போது இயங்கிவரும் இவ்வில்லங்களை அபிவிருத்தி செய்வதற்காகவும் மேம்படுத்துவதற்காகவும் சிறப்பு பாதீட்டு ஏற்பாட்டினை மேற்கொள்வதற்காக முக்கியத்துவம் வழங்குதல். அதில் தேவையான வசதிகளுடன் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாகாணங்களுக்கு ஒரு சான்றளிக்கப்பட்ட பாடசாலையினை நிறுவ நிதி ஒதுக்குவது பயனுள்ளதாகும் என பரிந்துரைக்கப்பட்டுள்ளது.*

*(iv)* *சிறுவர்கள் மற்றும் இளைஞர்களை நீதிமன்றங்களுக்கு கொண்டு செல்வதற்காக குறைந்தபட்சம் ஒரு வாகனத்தையாவது வழங்குதல் மற்றும் மாகாணங்களுக்கிடையே அல்லது மாகாணத்திற்குள் போக்குவரத்து வசதிகளை வழங்குதல்.*

*(v)* *சமூக ஒழுக்கக்கேடான சம்பவங்களால் பாதிக்கப்படுவதையும் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்படுவதையும் தவிர்ப்பதற்கு எதுவாக சமூகத்தில் உள்ள ஏனைய குழந்தைகளைப் போலவே நிறுவனப்படுத்தப்பட்ட சிறுவர்களுக்கும் தரமான தொழில் பயிற்சிகளை வழங்குவதற்கு தொழில் பயிற்சிகளுக்குப் பொறுப்பான தேசிய அளவிலான நிறுவனங்களுக்கு ஆலோசனை வழங்குதல்.*

*(vi)* *சமூக ஒழுக்கக்கேடான சம்பவங்களுக்குட்படுவதை அல்லது துஷ்பிரயோகத்திற்குள்ளாவதை தவிர்ப்பதற்காக 18 வயது பூர்த்தியடைந்த சிறார்களால் தங்கள் குடும்பங்களுடன் மீண்டும் இணைவதற்கோ அல்லது சமூகத்துடன் ஒருங்கிணையவோ முடியாத நிலையில் இருப்பின், சில நிபந்தனைகளின் கீழ் அந்தந்த நிறுவனங்களிலேயே தங்க வைப்பதற்காக சட்டங்களைத் திருத்துதல்.*

*(vii)* *தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு தற்போது வழங்கப்படும் வீட்டு வசதிகளை வழங்கும் செயன்முறையில், சமூகத்துடன் மீள இணைக்கப்படவுள்ள சிறுவர்களுக்கு முன்னுரிமை வழங்குதல்.*

*(viii)* *ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒட்டிசம் அல்லது பிற மனநலம் குன்றிய சிறுவர்களுக்கான சான்றுபடுத்தப்பட்ட பாடசாலைகள் போன்ற மையங்களை நிறுவுவதற்கோ அல்லது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாகாணங்களுக்கு குறைந்தபட்சம் ஒரு மையம் நிறுவுவதற்கோ நிதியினை வழங்குதல்.*

***(11) குறைந்த வருமானமீட்டும் குடும்பங்களில் ஊட்டச்சத்து குறைபாட்டினால் பாதிப்புற்ற சிறுவர்கள்***

*3 முதல் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு திரிபோஷா வழங்குவதன் மூலமும், பதிவு செய்யப்பட்ட முன்பள்ளிகளுக்கு வழங்கப்படும் உணவுகள் மூலமாகவும் குழந்தைகளின் ஊட்டச்சத்து குறைபாட்டினைக் குறைப்பதற்காக அரசாங்கம் சில முயற்சிகளை முன்னெடுத்தாலும், மேலும் சில பிரிவுகளுக்குட்பட்ட குழந்தைகள் ஊட்டச்சத்து குறைபாட்டினால் பாதிக்கப்பட்டுள்ளனர். அதாவது, (அ) திரிபோஷா அல்லது முன்பள்ளி உணவுவேளைகளைப் பெற்றுக்கொள்ளாத 3 வயதிற்குட்பட்ட குழந்தைகள் (இவர்கள் முன்பள்ளிகளுக்குச் செல்வதில்லை); (ஆ) முன்பள்ளி செல்லாத 3 தொடக்கம் 5 வயதிற்குட்பட்ட சிறுவர்கள்; (இ) பதிவு செய்யப்படாத முன்பள்ளிகளில் கற்கும் 3 தொடக்கம் 5 வயதுக்குட்பட்ட சிறுவர்கள்; (ஈ)மேற்குறிப்பிட்ட பிரிவுகளில் உள்ளடங்கும் பெருந்தோட்டத் துறையிலுள்ள சிறுவர்கள் போன்றோர்.*

*எனவே, அப்பிரிவுகளுக்குட்பட்ட சிறுவர்களின் ஊட்டச்சத்து குறைபாடு பிரச்சினையை தீர்க்க நிதி ஆணைக்குழு பின்வரும் பரிந்துரைகளை முன்மொழிந்துள்ளது;*

*I.* *(அ) அப்ளாடொக்சின் (Aflatoxin) இருப்பதாக சந்தேகிக்கும் தானிய வகை அதாவது சோளத்திற்குப் பதிலாக வேறு போசாக்குடைய தானியங்களை கலந்து திரிபோசா உற்பத்தி செய்யும் திரிபோசா நிறுவனத்தின் நடவடிக்கையினை ஊக்குவித்தல் மற்றும் அந்நிறுவனத்தினால் உற்பத்தி செய்யப்படும் "சுபோஷ" குறைந்த விலையில் பெற்றுக்கொடுப்பதற்கான இயலுமையினைக் கண்டறிதல்.*

(ஆ) ஊட்டச்சத்துள்ள தானியங்களின் கலவையை உள்ளடக்கி "சத்துமாவு" என சில பகுதிகளில் செயல்படுத்தப்பட்ட ஊட்டச்சத்து தலையீட்டினை, நாட்டின் பிற பகுதிகளுக்கும் பிரபல்யப்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்தல்.

(இ) நியாயமான விலையில் முட்டைகள் பெற்றுக்கொள்ள வழிவகை செய்தல்.

(ஈ) பெருந்தோட்டங்களில் பணிபுரியும் தாய்மார்கள் அந்தச் சேவைகளை பெறுவதற்கு வசதியாக இருக்கும் வகையில் பெருந்தோட்டப் பகுதிகளில் பணிபுரியும் சுகாதார வைத்திய அதிகாரிகள் மற்றும் சுகாதார மருத்துவிச்சிகளுக்கு நெகிழ்வான வேலை நேரங்களை அறிமுகப்படுத்துதல்.

(உ) அரசாங்கத்தின் கொள்கைகளுக்கிணங்க பெருந்தோட்ட நிறுவனங்களால் நடத்தப்படும் பெருந்தோட்டப் பகுதிகளில் உள்ள மருத்துவமனைகள் மற்றும் சுகாதார நிலையங்களை அரசாங்கத்திற்கு கையகப்படுத்தும் நடவடிக்கையை துரிதப்படுத்துவதற்காக சுகாதார அமைச்சு மற்றும் மாகாண சுகாதார அதிகார சபைகளின் பிரதிநிதிகளைக் கொண்ட குழுவொன்றை நிறுவுதல்.

(ஊ) முன்பள்ளிக் கல்வி மற்றும் முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி ஆகியவை மாகாண சபைகளுக்குக் அதிகாரமளிக்கப்பட்டுள்ள விடயங்கள் ஆகையால்,பாலர் பாடசாலை உணவு நிகழ்ச்சித்திட்டம் , முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி தொடர்பான தேசிய செயலகத்தினூடாக நடைமுறைப்படுத்தும் தற்போதைய பொறிமுறைக்குப் பதிலாக, அந் நிகழ்ச்சிகளை மாகாண சபைகளினூடு செயற்படுத்துவதற்கு அல்லது மாகாண அதிகாரிகளுடன் நெருங்கிய தொடர்பினைக் கொள்வதற்கு முன்மொழியப்படுகின்றது.

### ii. *2025 ஆம் ஆண்டுக்கான பரிந்துரைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்*

*நிதி ஆணைக்குழுவின் 2025ஆம் ஆண்டுக்கான பரிந்துரைகள் மீதான அமைச்சரவை விஞ்ஞாபனம், பரிந்துரையினை செயல்படுத்துவதற்கும் அதனைப் பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்கும் ஒப்புதல்களைக் கோரி 2025 ஜனவரி 23ஆந்திகதி கௌரவ ஜனாதிபதி அவர்களால் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டது. அதன்படி, 2025 ஜனவரி 27ஆந்திகதி அமைச்சரவையினால் இப்பரிந்துரைகளுக்கான ஒப்புதல் வழங்கப்பட்டதுடன் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்வதற்காக 2025 பெப்ரவரி 07 ஆந்திகதி சமர்ப்பிக்கப்பட்டது.*

### *2.1.6. காலாண்டு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்களை நடாத்துதல்*

*2024 ஆம் ஆண்டு 2024.12.31 தினத்திலுள்ளவாறு உள்ளக கணக்காய்வுத் திணைக்களத்தில் செயல்படுத்தப்பட்ட நடவடிக்கைகளின் முன்னேற்றம் பின்வருமாறு.*

1. *நிதி ஒழுங்குவிதி 134(2) இன் பிரகாரம், 2024 ஆம் ஆண்டிற்கான உள்ளக கணக்காய்வுத் திட்டமானது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டு, 2024.03.28 அன்று முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்திடமும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடமும் சமர்ப்பிக்கப்பட்டது.*

2. *முகாமைத்துவக் கணக்காய்வு சுற்றறிக்கை DMA /1 – 2019 இன் பிரகாரம், ஆரம்ப அறிக்கை தயாரிக்கப்பட்டு 2024 ஜனவரி மாதத்திற்குள் ஆணைக்குழுவின் செயலாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.*

3. அனைத்து உள்ளக கணக்காய்வு விசாரணைகளுக்கும் ஒரு மாதத்திற்குள் பதில்கள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

4. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் உட்பிரிவு 40(4) இன் படி, உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

5. நிதி ஒழுங்குவிதி 134(3) இன் பிரகாரம் உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

6. 2024 ஆம் ஆண்டு ஒவ்வொரு காலாண்டின் இறுதியிலும் மதிப்பீட்டு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதி மற்றும் முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

7. பின்வரும் திகதிகளில் 2024 ஆம் ஆண்டின் நான்கு காலாண்டுகளுக்கான உள்ளக கணக்காய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டது.

- முதல் காலாண்டு 2024.03.28
- இரண்டாம் காலாண்டு 2024.06.27
- மூன்றாம் காலாண்டு 2024.09.30
- நான்காம் காலாண்டு 2024.12.27

## 2.2. நிதி ஆணைக்குழுவினது கடந்த வருட சாதனைகள்

### (i) ஒவ்வொரு மாகாணத்தினதும் பிரதம செயலாளர்களை பிரதான கணக்கீட்டு அதிகாரிகளாக நியமித்தல்

மாகாண சபைகள் தாபிக்கப்பட்ட 1987 ஆம் ஆண்டின் ஆரம்பத்திலிருந்தே, மாகாண சபைகள் அமைச்சின் செயலாளர் ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒதுக்கப்பட்ட அரச நிதிக்கான பிரதான கணக்கீட்டு அதிகாரியாகக் கருதப்பட்டார். எவ்வாறாயினும், அரசியலமைப்பின் 13வது திருத்தத்தின் கீழ் அதிகாரங்கள் மற்றும் பணிகள் பன்முகப்படுத்தப்பட்டதன் படி, ஒவ்வொரு மாகாணத்தினதும் பிரதான கணக்கீட்டு அதிகாரி அந்தந்த மாகாணத்தின் பிரதம செயலாளராக இருக்க வேண்டுமென நிதி ஆணைக்குழு பல சந்தர்ப்பங்களில் வலியுறுத்தியது.

இதனை அரசு மற்றும் திறைசேரி ஏற்றுக்கொண்டு, ஒவ்வொரு மாகாணத்தினதும் பிரதம செயலாளர், அந்தந்த மாகாணத்திற்கான பிரதான கணக்கீட்டு அதிகாரியாக நியமிக்கப்படுவதாகக் அறிவித்து ஒரு கடிதத்தினை வெளியிட்டது.

### (ii) 2025 வருடாந்த பாதீட்டில் நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு அதிக அங்கீகாரம் கிடைத்தமை

2025 ஆம் ஆண்டிற்கான அரசாங்கத்தின் வருடாந்த வரவு செலவுத் திட்டத்தில் மாகாண சபைகளின் நிதித் தேவைகள் தொடர்பான நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு முன்னைய ஆண்டுகளை விட அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், மாகாண அபிவிருத்தியில் நேரடி தாக்கத்தை ஏற்படுத்தும் அரசாங்கத்தினது ஒட்டுமொத்தமான அபிவிருத்தி மூலோபாயம் குறித்து நிதி ஆணைக்குழுவினால் முன்வைக்கப்பட்ட கொள்கை பரிந்துரைகள் தொடர்பில் 2025 ஆம் ஆண்டுக்கான அரசாங்கத்தின் வருடாந்த பாதீட்டில் உயரிய அங்கீகாரமும் வழங்கப்பட்டு கௌரவ ஜனாதிபதி அவர்களின் பாதீட்டு உரையில் சிறப்பு குறிப்புடன் முன்வைக்கப்பட்டுள்ளது.

*மேற்குறிப்பிட்ட பாதீட்டு உரையில் சுட்டிக்காட்டப்பட்ட துறைகள் பின்வருமாறு;*

- *ஒட்டிசம் அல்லது பிற மனநல குறைபாடுள்ள மந்தபோசனையான சிறுவர்களுக்கான மையங்களை நிறுவுதல்.*
- *குறைவான மாணவர் எண்ணிக்கையினைக் கொண்ட கிராமிய மற்றும் தொலைதூரப் பாடசாலைகளைக் கருத்திற் கொண்டு பாடசாலைகளின் அமைவிடத்தினை மீண்டும் மாற்றம் செய்வது தொடர்பில் தேசிய திட்டத்தினைத் தயாரிப்பதற்காக பாடசாலை அமைப்பினை மீளாய்வு செய்தல்.*
- *நன்னடத்தை காலத்திலுள்ள சிறுவர்களின் நலனோம்பலை மேம்படுத்துவதற்காக சான்றளிக்கப்பட்ட பாடசாலைகள்/ தடுப்பு இல்லங்கள் மற்றும் சிறுவர் பராமரிப்பு நிறுவனங்களைப் புனரமைத்தல்.*
- *பாதிக்கப்பட்ட சிறுவர்களாகிய நிறுவனமயப்படுத்தப்பட்ட சிறுவர்கள் நீதிமன்றங்களுக்குச் சென்று திரும்புவதற்காக சிறுவர்களுக்கு ஏற்றவாறு போக்குவரத்து அமைப்பை நிறுவுதல்.*
- *அனாதை சிறுவர்களினதும் இளைஞர்களினதும் சமூகப்பாதுகாப்பினை மேம்படுத்தல்;*
    - *அனாதை சிறுவர்களுக்காக வீடமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்,*
    - *அருகாமையிலுள்ள தேசிய மற்றும் மாகாணப் பாடசாலைகளில் கல்வி வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்தல்,*
    - *NVQ 3 அல்லது 4ஆம் மட்ட தரமான தொழிற்பயிற்சியினை வழங்குதல்,*
    - *நிறுவனமயப்படுத்தப்பட்ட சிறுவர்களை சமூகமயப்படுத்தும் போது வீடமைப்பு வசதிகளை வழங்குவதில் முன்னுரிமையளித்தல்.*
    - *சமூகத்தில் மீண்டும் ஒன்றிணைவதற்கு பொருத்தமான இடவசதி இல்லாத 18 வயது பூர்த்தியடைந்த தனிநபர்களை சில நிபந்தனைகளின் கீழ், நிறுவனங்களில் தொடர்ந்தும் வசிக்க அனுமதிக்கும் வகையில் தொடர்புடைய சட்டங்களைத் திருத்துதல்.*

**(iii) நிதி ஆணைக்குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரைகளுக்கான அமைச்சரவையின் அங்கீகாரம் மற்றும் சிறப்பு வழிகாட்டல்கள்**

*2025 ஆம் ஆண்டுக்கான நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகள் தொடர்பாக 2025.01.23 ஆம் திகதியிட்ட 25/0144/801/003 ஆம் இலக்க அமைச்சரவைப் பத்திரத்தில் கௌரவ ஜனாதிபதி அவர்களின் அவதானிப்புக்கள், நிதி ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் நாட்டின் ஒட்டுமொத்த அபிவிருத்தி மூலோபாயத்தில் நன்கு பரிசீலிக்கப்படும் என்பதைக் காட்டுகிறது. கௌரவ ஜனாதிபதி அவர்களினால் முன்வைக்கப்பட்ட அந்த அவதானிப்புக்கள், 2025.01.27 ஆம் திகதிய CP/25/0144/801/003 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. கௌரவ ஜனாதிபதியால் முன்வைக்கப்பட்ட அவதானிப்புக்களின் சுருக்கம் பின்வருமாறு:*

- *உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற பலதரப்பு நிறுவனங்களால் மாகாண சபைகளுக்குப் பன்முகப்படுத்தப்பட்ட கல்வி மற்றும் சுகாதாரம் போன்ற விடயங்களுக்காக வழங்கப்படும் நிதியும், இருதரப்பு ரீதியாக வழங்கப்படும் நிதியும் 2025 முதல் மாகாண சபைகளுக்குக் கிடைக்கக்கூடியவாறு நடவடிக்கைகள் ஒழுங்குபடுத்தப்படும்.*
- *பல்வேறு பிராந்தியங்களின் அபிவிருத்திக்காக நிதியை விடுவிப்பதற்காக, நிதி ஆணைக்குழுவினால் பயன்படுத்தப்பட்டதைப் போன்ற ஒரு சூத்திரத்தை (அதே சூத்திரமாக இருக்க வேண்டிய அவசியமில்லை) நிரல் அமைச்சுக்களும் பயன்படுத்தினால் அது மிகவும் பொருத்தமானதாக இருக்கும்.*

* அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக மாகாண சபைகள் தற்போது பின்பற்றும் பொறிமுறையினைப் போன்ற ஒரு திட்டமிடல் பொறிமுறையை ஏற்றுக்கொள்வதன் மூலம் அனைத்து அரச நிறுவனங்களுக்கும் ஒருங்கிணைந்த திட்டமிடல் பொறிமுறையைப் பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை தேசிய திட்டமிடல் திணைக்களம் ஆராய்வது பொருத்தமாகும்.

* அதிகாரப் பன்முகப்படுத்தப்பட்ட விடயங்களுக்காக நிரல் அமைச்சுக்களுக்கு நிதி ஒதுக்காமல் இருக்கத் தேவையான நடவடிக்கைகளை அரச திறைசேரி எடுக்க வேண்டும்.

* வெளிநாட்டு நிதியுதவியின் கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட விடயங்களுக்கான மானிய நிதி குறித்து நடவடிக்கைகளை மேற்கொள்ள மாகாண சபைகளுக்கு போதுமான திறன் இருப்பதால் அச்செயற்பாடுகள் தொடர்பில் வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும்.

* கேள்விமனுக்கோரல் நடைமுறையைத் தவிர்த்து, சமூக மட்டத்திலான அமைப்புகளுக்கு (CBOs) நேரடி ஒப்பந்தங்களை வழங்கும் தற்போதைய நடைமுறையை மறுபரிசீலனை செய்வதற்கான முன்மொழிவு குறித்து பொருத்தமான பரிந்துரைகளை வழங்குமாறு அரச திறைசேரியின் பொது நிதித் திணைக்களத்திற்கு உத்தரவிட வேண்டும்.

* 2024.12.30 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின்படி, ஆளணி மீளாய்வு விடயத்திற்காக நியமிக்கப்பட்ட அதிகாரிகள் குழுவின் பரிசீலனைக்காக, மாகாண ஆளணியினரை ஒழுங்கமைந்த முறையில் பணியமர்த்தல் தொடர்பாக குறித்த முன்மொழிவை சமர்ப்பித்தல்.

* 2017 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட சட்ட வரைவுகளில் உள்ளடக்கப்பட்ட திருத்தங்களைத் தவிர தேவையேற்படும் எனக் கருதும் காலத்திற்கேற்ற திருத்தங்கள் பற்றி கௌரவ அமைச்சர் அவர்களின் மூலம் அமைச்சரவைக்கு அறிக்கையொன்றினை சமர்ப்பிக்குமாறு உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு கட்டளையிடல்.

* நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைத் தீர்வைகளை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு நேரடியாக மாற்றுவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்காக நிதி ஆணைக்குழுப் பரிந்துரையில் உள்ள முன்மொழிவினை கருத்திற் கொள்ளல்.மேலும் விசர்நாய்க்கடி நோய் கட்டுப்பாட்டுக்கான பொறுப்பை ஒரு குறிப்பிட்ட அரச நிறுவனத்திற்கு வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு முன்னுரிமை அளிப்பதனை கருத்திற்கொள்ளல்.

* மாகாணப் பாடசாலைகளுக்கு போதுமான எண்ணிக்கையிலான ஆசிரியர்களை ஒதுக்குவது தொடர்பான முன்மொழிவை உரிய பரிசீலனைக்கு உட்படுத்துமாறு கௌரவ பிரதமர் (மாண்புமிகு கல்வி அமைச்சர்) அவர்களிடம் கோருவதற்கு முன்மொழிதல்.

* கிராமிய மற்றும் பெருந்தோட்டப் பகுதிகளில் குறைந்த எண்ணிக்கையிலான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளை மறுசீரமைப்பதன் மூலம் கல்வி வசதிகளை மேம்படுத்துவதன் அவசியத்தினை சுட்டிக்காட்டும் விடயத்தில் கொள்கை முடிவெடுக்க அமைச்சரவையின் பரிசீலனைக்கு உத்தரவிடல்.

* நிறுவனமயப்படுத்தப்பட்ட சிறுவர்களின் மேம்பாடு தொடர்பாக நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் கொள்கை பரிந்துரை இல. 10 இன் கீழ்

*சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரைகளுக்கு தொடர்புபட்ட அதிகாரிகளின் உரிய கவனத்தை செலுத்த பரிந்துரைத்தல். அவ்விடயத்தில், கொள்கைப் பரிந்துரை இல.10 (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள உரிய சட்டங்களைத் திருத்துவதற்கான முன்மொழிவு குறித்து, உரிய அமைச்சர்கள் மூலம் அமைச்சரவைக்கு கூட்டு அறிக்கையை சமர்ப்பிக்குமாறு மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு, கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சின் செயலாளர்களுக்கு உத்தரவிட முன்மொழிகிறது.*

*மேலும், உதாரணமாக, உரிய நிறுவனங்களுக்குத் தேவையான அனுபவம் வாய்ந்த மற்றும் தொழில் தேர்ச்சியுடைய ஊழியர்களுக்கான ஆளணி அங்கீகாரம்/ வெற்றிடங்களை நிரப்புவது மற்றும் நிறுவனமயப்படுத்தப்பட்ட சிறுவர்களின் போக்குவரத்துக்காக வாகனங்கள்/போக்குவரத்து வசதிகளை வழங்குவது தொடர்பாக கொள்கை பரிந்துரை எண்.10 இல் உள்ள பரிந்துரைகள் (ii) மற்றும் (iv) தொடர்பாக உடனடி நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட முன்மொழிகிறது.*

* *நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் 11 ஆம் இலக்க கொள்கை பரிந்துரையில் குறிப்பிடப்பட்டுள்ள திட்டங்களை, ஏனைய தொடர்புடைய அமைச்சுக்களின் ஒத்துழைப்புடன் பொருத்தமான முறையிலே செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயுமாறு கௌரவ மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர் மற்றும் கௌரவ சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் ஆகியோரைக் கோருதல்.*

### *2.3. சவால்களும் எதிர்கால கண்ணோட்டமும்*

*கடந்த சில ஆண்டுகளாக நாடு எதிர்கொண்ட கடுமையான பொருளாதார நெருக்கடியின் பின்னர், இலங்கைப் பொருளாதாரமானது ஒரு தற்காலிக ஸ்திரத்தன்மையினை காட்டுகின்றது. உற்பத்தி மற்றும் சேவைத் துறை பொருளாதார மறுமலர்ச்சியில் கவனம் செலுத்தி, நலன்புரி விடயங்களை கருத்தில் கொண்டு மக்களுக்கான சமூகப் பாதுகாப்பை உறுதி செய்வது, எதிர்வரும் ஆண்டுகளில் இலங்கைக்கான ஒட்டுமொத்த சவாலாக மாறியுள்ளது. இதில், அரசியலமைப்பின் பன்முகப்படுத்தப்பட்ட விடயங்களில் மாகாண சபை அமைப்பின் பயனுறுதியான தலையீடு மற்றும் பங்களிப்பு முக்கியமானதாகவும் அத்தியாவசியமானதாகவும் மாறியுள்ளது.*

*இச்சூழ்நிலைகளின் கீழ், மக்களின் பொருளாதார வளர்ச்சியினையும் சமூக நல்வாழ்வினையும் அடைவதற்காக, அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிப்பதிலும், கருத்திட்டங்களை செயல்படுத்துவதிலும் மாகாண சபைகளை வழிநடத்துவது தொடர்பாக நிதி ஆணைக்குழுவிற்கு மிகவும் உறுதியான வகிபாகம் பொறுப்பளிக்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள நிதிக் கட்டுப்பாடுகள் காரணமாக மாகாணங்களுக்கு ஒதுக்கப்படும் வளங்கள் வரையறுக்கப்பட்டு காணப்படுவதால், ஒட்டுமொத்த மாகாண அபிவிருத்தியில் கவனம் செலுத்தும் வகையில் இரட்டிப்பினைத் தவிர்ப்பதன் மூலமாக வளங்கள் விரயமாவதைத் தவிர்க்கவும், அதே நேரத்தில் அபிவிருத்தி வெளியீடுகளின் நிலையான பயன்பாட்டை உறுதி செய்யவும் நிரல் அமைச்சுக்களுக்கும் மாகாண சபைகளுக்கும் இடையிலான சரியான ஒருங்கிணைப்பு அவசியமாகும். இத்தகைய நிலைமைகளில், நாட்டின் நிலையான அபிவிருத்தியினை அடைவதற்காக நிதி ஆணைக்குழுவானது தேசிய மற்றும் மாகாண சபைகளுக்கிடையே ஒரு இடைத்தரகராக செயல்பட வேண்டும்.*

## *அத்தியாயம் - 03: 2024 டிசம்பர் 31ஆந் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான ஒட்டுமொத்த நிதி செயலாற்றுகை*

### *3.1. நிதிச் செயலாற்றுகைக் கூற்று*

ஏசீஏ- எப்

**2024 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று**

(ரூபா)

| திருத்தப்பட்ட பாதீட்டு ஒதுக்கீடு 2024 | | குறிப்பு | உண்மை நிலை 2024 | உண்மை நிலை 2023 | |
|---|---|---|---|---|---|
| | **வருமானப் பெறுகைகள்** | | | | |
| - | வருமான வரி | 1 | - | - | ஏசீஏ-1 |
| - | உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி | 2 | - | - | ஏசீஏ-1 |
| - | சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள் | 3 | - | - | ஏசீஏ-1 |
| - | வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும் | 4 | - | - | ஏசீஏ-1 |
| - | **மொத்த வருமானப் பெறுகைகள் (அ)** | | - | - | |
| | **வருமானமற்ற பெறுகைகள்** | | - | - | |
| - | திறைசேரி பணிமுற்பணங்கள் | | 101,034,000 | 91,794,000 | ஏசீஏ-3 |
| - | வைப்புக்கள் | | 142,220 | 617,496 | ஏசீஏ-4 |
| - | முற்பணக் கணக்குகள் | | 3,998,693 | 3,917,880 | ஏசீஏ-5 |
| - | ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள் | | - | - | |
| - | **மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)** | | **105,174,913** | 96,329,376 | |
| - | **மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)** | | **105,174,913** | 96,329,376 | |
| | **திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ)** | | **892,132** | 1,768,043 | |
| | **தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ)-(ஈ)** | | **104,282,781** | 94,561,333 | |
| | **கழி : செலவினம்** | | | | |
| | **மீண்டுவரும் செலவினம்** | | | | |
| 62,910,000 | சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள் | 5 | 61,617,586 | 55,698,302 | ஏசீஏ-2(ii) |
| 43,440,000 | ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகள் | 6 | 40,101,413 | 33,813,632 | ஏசீஏ-2(ii) |
| 650,000 | மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள் | 7 | 613,158 | 652,131 | ஏசீஏ-2(ii) |
| - | வட்டிக் கொடுப்பனவுகள் | 8 | - | - | ஏசீஏ-2(ii) |
| - | ஏனைய மீண்டுவரும் செலவினம் | 9 | - | - | ஏசீஏ-2(ii) |
| **107,000,000** | **மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ)** | | **102,332,157** | 90,164,065 | |
| | **மூலதனச் செலவினம்** | | | | |
| 300,000 | மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பும், மேம்படுத்தலும் | 10 | - | 132,315 | ஏசீஏ-2(ii) |
| 2,400,000 | மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு | 11 | 1,666,431 | 2,706,110 | ஏசீஏ-2(ii) |
| - | மூலதன மாற்றல்கள் | 12 | - | - | ஏசீஏ-2(ii) |
| - | நிதிச் சொத்துக்களின் கொள்வனவு | 13 | | - | ஏசீஏ-2(ii) |
| 300,000 | திறன் விருத்தி | 14 | 297,505 | 239,825 | ஏசீஏ-2(ii) |
| - | ஏனைய மூலதனச் செலவினங்கள் | 15 | - | - | ஏசீஏ-2(ii) |
| **3,000,000** | **மொத்த மூலதனச் செலவினம் (எ)** | | **1,963,936** | 3,078,249 | |
| | **வைப்புக் கொடுப்பனவுகள்** | | 142,220 | 617,496 | ஏசீஏ-4 |
| | **முற்பணக் கொடுப்பனவுகள்** | | 2,906,189 | 3,701,418 | ஏசீஏ-5 |
| | **ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம்** | | - | - | |
| | **மொத்த பிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ)** | | **3,048,409** | 4,318,914 | |
| | **மொத்த செலவினம் ஐ = (ஊ+எ+ஏ)** | | 107,344,502 | 97,561,228 | |
| | **டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ = (உ-ஐ)** | | (3,061,721) | (2,999,895) | |
| | **பணிமுற்பண சீராக்கல் கூற்றின்படி மீதி** | | (3,061,721) | (2,999,895) | ஏசீஏ-7 |
| - | **டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி** | | - | - | ஏசீஏ-3 |

## *3.2. நிதி நிலைமைக் கூற்று*

ஏசீஏ -பீ

### 2024 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
### நிதி நிலைமைக் கூற்று

| | குறிப்பு | உண்மை நிலை 2024 ரூபா | 2023 ரூபா |
|---|---|---|---|
| **நிதியல்லாச் சொத்துக்கள்** | | | |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் | ஏசீஏ-6 | 807,288,825 | 800,266,003 |
| **நிதிச் சொத்துக்கள்** | | | |
| முற்பணக் கணக்குகள் | ஏசீஏ-5/5ஏ | 8,201,144 | 9,293,648 |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவை | ஏசீஏ-3 | - | - |
| **மொத்த சொத்துக்கள்** | | **815,489,969** | **809,559,651** |
| **தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு** | | | |
| திறைசேரிக்கான தேறிய சொத்துக்கள் | | 8,201,144 | 9,293,648 |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம் | | 807,288,825 | 800,266,003 |
| வாடகை மற்றும் பணிமுற்பண ஒதுக்கம் | ஏசீஏ-5பீ | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| வைப்புக் கணக்குகள் | ஏசீஏ-4 | - | - |
| பணிமுற்பண மீதி | ஏசீஏ-3 | - | - |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **815,489,969** | **809,559,651** |

பக்க இலக்கம் 08 முதல் 28 வரை ஏசீஏ 2 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புக்களின்/பின்னிணைப்புக்களின் பக்க இலக்கம் 29 முதல் 35 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புக்களின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். 2024 ஆம் ஆண்டின் 16.12.2024 திகதியிடப்பட்ட இல 06 அரச கணக்குகள் விதிமுறைகள் மற்றும் அரச நிதி விதிமுறைகள் 150 மற்றும் 151 ஆகியவற்றின் தேவைகளுக்கு ஏற்ப நிதி நிலைமைக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புக்கள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

| | | |
|---|---|---|
| ................................ | .................. | ................................ |
| பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் | கணக்கீட்டு உத்தியோகத்தர் | பிரதான கணக்காளர் |
| பெயர்: | பெயர்: | பெயர் : |
| பதவி : | பதவி : | |
| திகதி : 20/02/2025 | திகதி : | திகதி : 20/02/25 |

A.T.M.U.D.B.Tennakoon
Secretary
Finance Commission
No. 03, Sarana Mawatha
Rajagiriya.

Sandya Kumudini Kothalawala
Chief Accountant
Finance Commission
No. 03, Sarana Mawatha Rajagiriya

## *3.3. காசுப்பாய்ச்சல் கூற்று*

ஏசீஏ- சீ

### 2024 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
### காசுப் பாய்ச்சல் கூற்று

| | உண்மை | |
|---|---|---|
| | 2024<br>ரூபா | 2023<br>ரூபா |
| <u>தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்</u> | | |
| மொத்த வரிப் பெறுகைகள் | - | - |
| கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள் | - | - |
| இலாபம் | - | - |
| வருமானம் அல்லாத பெறுகைகள் | 3,139,735 | 2,652,986 |
| ஏனைய வருமான தலைப்புக்களுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம் | - | |
| கிடைக்கப்பெற்ற கட்டுநிதி | 101,034,000 | 91,794,000 |
| முற்பணங்களை அறவிடல் | 3,826,779 | 4,151,714 |
| வைப்புக்களின் பெறுகை | 142,220 | 617,496 |
| **செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)** | **108,142,734** | **99,216,196** |
| <u>கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு</u> | | |
| ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாட்டுக் கொடுப்பனவுகள் | 101,537,599 | 89,398,859 |
| மானியங்களும் மாற்றல் கொடுப்பனவுகளும் | 613,158 | 652,131 |
| ஏனைய செலவினத் தலைப்புக்களுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் | - | - |
| திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம் | 892,132 | 1,768,043 |
| முற்பணக் கொடுப்பனவு | 2,993,689 | 3,701,418 |
| வைப்புக் கொடுப்பனவு | 142,220 | 617,496 |
| **தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)** | **106,178,798** | **96,137,947** |
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)** | **1,963,936** | **3,078,249** |
| <u>முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்</u> | | |
| வட்டி | - | - |
| பங்கு இலாபம் | - | - |
| உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பௌதீக சொத்துக்களின் விற்பனை | - | - |
| உப கடன்கள் மீதான அறவீடுகள் | - | - |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)** | - | - |
| <u>கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:</u> | | |
| மூலதனச் செலவினம் | 1,963,936 | 3,078,249 |
| **முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)** | **1,963,936** | **3,078,249** |
| **முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)** | **(1,963,936)** | **(3,078,249)** |
| **தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ)+(ஊ)** | **(0)** | - |
| <u>நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்</u> | | |
| உள்ளூர்க் கடன்கள் | - | - |
| வெளிநாட்டுக் கடன்கள் | - | - |
| பெற்ற நன்கொடைகள் | - | - |
| | - | - |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)** | | |
| *<u>கழி - பகிர்ந்நதளிக்கப்பட்ட காசு:</u>* | | |
| உள்ளூர் கடன்கள் மீதான மீள்க் கொடுப்பனவுகள் | - | - |
| வெளிநாட்டுக் கடன்கள் மீதான மீள்க் கொடுப்பனவுகள் | - | - |
| **நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)** | - | - |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ)** | - | - |
| **காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ) +(ஒ)** | - | - |
| **ஜனவரி 01 ஆம் திகதியிலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி** | - | - |
| **டிசம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறான இறுதிக் காசு மீதி** | - | - |

### *3.4. நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்*

**அறிக்கையிடலின் அடிப்படை**

1) **தயார்படுத்தலின் நோக்கம்**

2024 ஆம் ஆண்டின் 16.12.2024 திகதியிடப்பட்ட இல 06 அரச கணக்குகள் விதிமுறைகள் மற்றும் அரச நிதி விதிமுறைகள் 150 மற்றும் 151 ஆகியவற்றின் தேவைகளுக்கு ஏற்ப நிதி நிலைமைக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

2) **அறிக்கையிடல் காலப்பகுதி**

இந் நிதிக் கூற்றுக்களுக்கான அறிக்கையிடல் காலப்பகுதி 2024 சனவரி 01 முதல் டிசம்பர் 31 வரையானதாகும்.

3) **அளவீட்டுக்கான அடிப்படை**

நிதிக்கூற்றுக்களானது, வரலாற்றுக் கிரய அடிப்படையிலேயே தயாரிக்கப்பட்டுள்ள அதேவேளையில், ஒரு சில சொத்துக்களின் வரலாற்றுக் கிரயம் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிக்கு மேம்படுத்தப்பட்டுள்ளது. வேறு விதத்தில் குறிப்பிடப்பட்டில்லாத போது கணக்கு தயாரிப்பு நடவடிக்கைகள் மேம்படுத்தப்பட்ட காசு அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

நிதிக் கூற்றுக்களிலுள்ள இலக்கங்கள் இலங்கை ரூபாவில் கிட்டிய ரூபாய்க்கு தயாரிக்கப்பட்டுள்ளது.

4) **வருமானங்களை அடையாளங்காணுதல்**

நாணயமாற்று மற்றும் நாணயமாற்று அல்லாத வருமானங்கள் அவை கிடைக்கக்கூடிய காலப்பகுதியை கவனத்திற்கொள்ளாது, காசு கிடைக்கக் கூடிய காலப்பகுதிக்குள் வருமானமாக அடையாளங் காணப்படுகின்றது.

5) **ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றை அடையாளங்காணுதல் மற்றும் அளவீடு**

சொத்துக்கள் நம்பத்தகுந்த அடிப்படையில் அளவிடப்படுகின்றதா மற்றும் நிறுவனத்தின் சொத்துக்கள் எதிர்கால பொருளாதார நலன்களுடன் தொடர்புடையதாக இருக்கின்றதா என்பதற்கான நிகழ்தகவின் அடிப்படையிலேயே ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன.

ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்கள் கிரயமாக அடையாளங்காணப்படுவதோடு கிரயமுறை பொருத்தமில்லாத சந்தர்ப்பங்களில் மீள்மதிப்பீட்டு முறையில் அளவீடு செய்யப்படுகின்றது.

6) **ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்களின் இருப்பு**

இந்த மீள்மதிப்பு ஒதுக்கீட்டுக் கணக்கானது சொத்து, இயந்திர மற்றும் உபகரண கணக்கின் தொடர்புபட்டதாகும்.

7) **காசு மற்றும் காசுக்கு சமமானவை**

காசு மற்றும் காசுக்கு சமமானவை 2024 டிசம்பர் 31 இல் உள்ள உள்நாட்டு நாணயத்தாள்கள் மற்றும் நாணயங்களை உள்ளடக்கியதாகும்.

8) **2023 ஆம் வருடத்தின் ஒப்பீட்டுத் தகவல்**

2023 ஆம் வருட நிதிக்கூற்று கணக்காய்வின் போது கண்டுபிடிக்கப்பட்ட பிழைகள் திருத்தப்பட்டு 2024 ஆம் வருடத்தின் நிதிக்கூற்றுக்களில் ஒப்பீட்டுத் தகவல் வெளிக்காட்டப்பட்டுள்ளது.

### *3.5. வருமான சேகரிப்பின் செயலாற்றுகை*

| வருமானக் குறியீடு | வருமானக் குறியீட்டின் விபரம் | வருமான மதிப்பீடு | | சேகரிக்கப்பட்ட வருமானம் | |
|---|---|---|---|---|---|
| | | அசல் மதிப்பீடு | இறுதி மதிப்பீடு | தொகை (ரூ.) | இறுதி வருமான மதிப்பீட்டின் வீதம் |
| 2002.02.99 | வட்டி வருமானம் | - | - | 372,835.78 | - |
| 2003.99.00 | ஏனைய வருமானம் | - | - | 392,585.02 | - |
| 2004.01.00 | வி.த மற்றும் அநாதைகள் ஒய்வூதியம் | - | - | 2,374,313.76 | - |

### *3.6. ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை*

| ஒதுக்கீட்டின் வகை | ஒதுக்கீடு (ரூ.) | | உண்மையான செலவினம் (ரூ.) | இறுதி ஒதுக்கீட்டின் வீதமாக ஒதுக்கீட்டுப் பயன்பாடு |
|---|---|---|---|---|
| | உண்மையான ஒதுக்கீடு | இறுதி ஒதுக்கீடு | | |
| மீண்டெழும் | 107,000,000 | 107,000,000 | 102,332,156 | 96% |
| மூலதனம் | 3,000,000 | 3,000,000 | 1,963,936 | 65% |

### *3.7. நி.ஒ. 208 இன் பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள் / திணைக்களங்களின் முகவராக இத் திணைக்களம் / மாவட்ட செயலகம் / மாகாண சபைக்கான செலவினத்திற்கான ஒதுக்கீடு*

| தொடர் இல. | ஒதுக்கீடு திருத்தப்பட்ட அமைச்சு/திணைக்களம் | ஒதுக்கீட்டின் நோக்கம் | ஒதுக்கீடு | | உண்மையான செலவினம் | இறுதி ஒதுக்கீட்டின் வீதமாக ஒதுக்கீட்டுப் பயன்பாடு |
|---|---|---|---|---|---|---|
| | | | உண்மையான ஒதுக்கீடு | இறுதி ஒதுக்கீடு | | |
| - | பொருத்தமற்றது | பொருத்தமற்றது | பொருத்தமற்றது | பொருத்தமற்றது | பொருத்தமற்றது | பொருத்தமற்றது |

### *3.8. நிதி அல்லாத சொத்துக்களின் அறிக்கையிடல் செயலாற்றுகை*

| ஆதனக் குறியீடு | குறியீட்டு விபரம் | 2024.12.31 ஆந்திகதியன்று சுற்றாய்வுச் சபை அறிக்கையின் படி மீதி (ரூ.) | 2024.12.31 ஆந்திகதியன்று நிதி நிலைமை அறிக்கையின்படி மீதி (ரூ.) | எதிர்காலத்தில் கணக்கிட வேண்டியவை | அறிக்கையிடல் முன்னேற்ற வீதம் |
|---|---|---|---|---|---|
| 9151 | கட்டடம் மற்றும் கட்டமைப்பு | 449,009,540.32 | 449,009,540.32 | - | - |
| 9152 | இயந்திரம் மற்றும் உபகரணங்கள் | 100,279,285.02 | 100,279,285.02 | - | - |
| 9153 | காணி | 258,000,000.00 | 258,000,000.00 | - | - |
| 9154 | கட்புலனாகாச் சொத்துக்கள் | - | - | - | - |
| 9155 | உயிரியல் சொத்துக்கள் | - | - | - | - |
| 9160 | நடைபெறும் பணிகள் | - | - | - | - |
| 9180 | குத்தகைச் சொத்துக்கள் | - | - | - | - |

## *3.9. கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை*

**ජාතික විගණන කාර්යාලය**
**தேசிய கணக்காய்வு அலுவலகம்**
**NATIONAL AUDIT OFFICE**

මගේ අංකය / எனது இல. / My No. PIC/C/FC/2/24/02    ඔබේ අංකය / உமது இல. / Your No.    දිනය / திகதி / Date 2025 මැයි 30 දින

මුදල් කොමිෂන් සභාව
30 MAY 2025.

ප්‍රධාන ගණන් දීමේ නිලධාරී

මුදල් කොමිෂන් සභාව

**ශීර්ෂය 011 - මුදල් කොමිෂන් සභාවේ 2024 දෙසැම්බර් 31 දිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ මූල්‍ය ප්‍රකාශන පිළිබඳව 2018 අංක 19 දරන ජාතික විගණන පනතේ 11(1) වගන්තිය ප්‍රකාරව විගණකාධිපති සම්පිණ්ඩන වාර්තාව**

**1.** මූල්‍ය ප්‍රකාශන

**1.1** මතය

ශීර්ෂය 011 - මුදල් කොමිෂන් සභාවේ 2024 දෙසැම්බර් 31 දිනට මූල්‍ය තත්ත්වය පිළිබඳ ප්‍රකාශය, එදිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ මූල්‍ය කාර්යසාධන ප්‍රකාශය හා මුදල් ප්‍රවාහ ප්‍රකාශවලින් සමන්විත 2024 දෙසැම්බර් 31 දිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ මූල්‍ය ප්‍රකාශන 2018 අංක 19 දරන ජාතික විගණන පනතේ විධිවිධාන සමඟ සංයෝජිතව කියවිය යුතු ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාවේ 154(1) ව්‍යවස්ථාවේ ඇතුළත් විධිවිධාන ප්‍රකාර මාගේ විධානය යටතේ විගණනය කරන ලදී. 2018 අංක 19 දරන ජාතික විගණන පනතේ 11(1) වගන්තිය ප්‍රකාරව මුදල් කොමිෂන් සභාව වෙත ඉදිරිපත් කරනු ලබන මෙම මූල්‍ය ප්‍රකාශන පිළිබඳව මාගේ අදහස් දැක්වීම් හා නිරීක්ෂණයන් මෙම වාර්තාවේ සඳහන් වේ. 2018 අංක 19 දරන ජාතික විගණන පනතේ 11(2) වගන්තිය ප්‍රකාරව ප්‍රධාන ගණන්දීමේ නිලධාරී වෙත වාර්ෂික විස්තරාත්මක කළමනාකරණ විගණන වාර්තාව යථා කාලයේදී ඉදිරිපත් කරනු ලැබේ. ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාවේ 154(6) ව්‍යවස්ථාව සමඟ සංයෝජිතව කියවිය යුතු 2018 අංක 19 දරන ජාතික විගණන පනතේ 10 වගන්තිය ප්‍රකාරව ඉදිරිපත් කළ යුතු විගණකාධිපති වාර්තාව යථා කාලයේදී පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කරනු ලැබේ.

මුදල් කොමිෂන් සභාවේ 2024 දෙසැම්බර් 31 දිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ මූල්‍ය ප්‍රකාශනවලින්, මූල්‍ය තත්ත්වය, මූල්‍ය කාර්යසාධනය හා මුදල් ප්‍රවාහ, මූල්‍ය ප්‍රකාශන වලට අදාළ සටහන් 1හි සඳහන් මූල්‍ය ප්‍රකාශන සකස් කිරීමේ පදනමට අනුකූලව සියලුම ප්‍රමාණාත්මකතාවයන් සම්බන්ධයෙන් සාධාරණ තත්ත්වයක් පිළිබිඹු කරන බව මා දරන්නා වූ මතය වේ.

**1.2** **මතය සඳහා පදනම**

ශ්‍රී ලංකා විගණන ප්‍රමිතිවලට (ශ්‍රී.ලං.වි.ප්‍ර) අනුකූලව මා විගණනය සිදු කරන ලදී. මෙම විගණන ප්‍රමිති යටතේ වූ මාගේ වගකීම, මෙම වාර්තාවේ මූල්‍ය ප්‍රකාශන විගණනය සම්බන්ධයෙන් විගණකගේ වගකීම යන කොටසේ තවදුරටත් විස්තර කර ඇත. මාගේ මතය සඳහා පදනමක් සැපයීම උදෙසා මා විසින් ලබා ගෙන ඇති විගණන සාක්ෂි ප්‍රමාණවත් සහ උචිත බව මාගේ විශ්වාසයයි.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ag@auditorgeneral.gov.lk www.naosl.gov.lk

### 1.3 කරුණක් අවධාරණය කිරීම - මූල්‍ය ප්‍රකාශන සකස් කිරීමේ පදනම

මෙම මූල්‍ය ප්‍රකාශන සකස් කිරීමේ පදනම විස්තර කරන මූල්‍ය ප්‍රකාශනවලට අදාල සටහන් 1 කෙරෙහි අවධානය යොමු කරවමි. මූල්‍ය ප්‍රකාශන රජයේ මුදල් රෙගුලාසි 150 හා 151 සහ 2025 පෙබරවාරි 21 දින සංශෝධිත 2024 දෙසැම්බර් 16 දිනැති රාජ්‍ය ගිණුම් මාර්ගෝපදේශ අංක 06/2024 අනුව මුදල් කොමිෂන් සභාවේ, මහා භාණ්ඩාගාරයේ සහ පාර්ලිමේන්තුවේ අවශ්‍යතාවය සඳහා සකස්කර ඇත. එම නිසා, මෙම මූල්‍ය ප්‍රකාශන වෙනත් අරමුණු සඳහා සුදුසු නොවිය හැක. මගේ වාර්තාව මුදල් කොමිෂන් සභාවේ, මහා භාණ්ඩාගාරයේ සහ ශ්‍රී ලංකා පාර්ලිමේන්තුවේ භාවිතය සඳහා පමණක් අරමුණු කර ඇත. මෙම කරුණ සම්බන්ධයෙන් මගේ මතය විකරණය කරනු නොලැබේ.

### 1.4 මූල්‍ය ප්‍රකාශන සම්බන්ධයෙන් ප්‍රධාන ගණන්දීමේ නිලධාරීගේ වගකීම

රජයේ මුදල් රෙගුලාසි 150 හා 151 සහ 2025 පෙබරවාරි 21 දින සංශෝධිත 2024 දෙසැම්බර් 16 දිනැති රාජ්‍ය ගිණුම් මාර්ගෝපදේශ අංක 06/2024 අනුකූලව සියලුම ප්‍රමාණාත්මකතාවයන් සම්බන්ධයෙන් සාධාරණ තත්ත්වයක් පිළිඹිබු කෙරෙන පරිදි මූල්‍ය ප්‍රකාශන පිළියෙල කිරීම හා වංචා සහ වැරදි හේතුවෙන් ඇති විය හැකි ප්‍රමාණාත්මක සාවද්‍ය ප්‍රකාශනයන්ගෙන් තොරව මූල්‍ය ප්‍රකාශන පිළියෙල කිරීමට හැකි වනු පිණිස අවශ්‍යවන අභ්‍යන්තර පාලනය තීරණය කිරීම ප්‍රධාන ගණන්දීමේ නිලධාරීගේ වගකීම වේ.

2018 අංක 19 දරන ජාතික විගණන පනතේ 16(1) වගන්තිය ප්‍රකාරව මුදල් කොමිෂන් සභාව විසින් වාර්ෂික හා කාලීන මූල්‍ය ප්‍රකාශන පිළියෙල කිරීමට හැකිවන පරිදි ස්වකීය ආදායම්, වියදම්, වත්කම් හා බැරකම් පිළිබඳ නිසි පරිදි පොත්පත් හා වාර්තා පවත්වා ගෙන යා යුතුය.

